
உ

# அருள் ஒளி





எங்கள் தேவஸ்தானத்தின் முன்னாள் தலைவர்

## அதிபர் தெ.து.ஜயரத்தினம் அவர்களின்

## நூற்றாண்டுவிழாச் சிறப்பு வெளியீடு

வெளியீடு :

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

2013

# அதிபர் தெ.து. ஜயரத்தினம் ஐயா நினைவுக் காட்சிகள்



அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கட்கு துர்க்காதுரந்தரி விருது வழங்குகிறார் (1973)



மலாயா நாட்டில் உரையாற்றி நாடு திரும்பிய துர்க்காதுரந்தரியை பலாலி விமான நிலையத்தில் ஐயா புன்புறுவலுடன் வரவேற்கும் காட்சி.



உ

# அருள் ஒளி

**(மாதாந்த சஞ்சிகை)**

ஆசிரியர்

**கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்**

**உதவி ஆசிரியர்**

**சைவத்திரு. கா. சிவபாலன் அவர்கள்**

**புரட்டாதி மாத மலர்**

**2013**

**வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை, இலங்கை.**

e-mail : thurkaiammantemple@gmail.com
Face book: tellidurga@gmail.com

**பதிவு இல. : QD / 74 / NEWS / 2006Y**


OCT

## ஆசிரியர் தினம்

மாதா, பிதா, குரு, தெய்வம் மலரடி தினம் தினம் தொழுவோம் என்ற உயர் பண்பாட்டு நெறியை நாம் மறந்துவிடமுடியாது. ஆசிரியர்கள் எமது அறிவுக்கண்களைத் திறந்து ஆற்றுப்படுத்துகின்ற கண்கண்ட தெய்வங்கள் என்பது அனைவரும் அறிந்ததே. ஆசிரியத்துவத்தின் மேன்மை இதிகாசங்கள், புராணங்கள், காப்பியங்கள் அனைத்தும் நன்கு விளக்கியுள்ளன. பேரறிஞர்களின் வாழ்க்கைச் சரித்திரங்கள் அனைத்திலும் அவர்களை உருவாக்கிய ஆசிரியர்களின் மேன்மை பேசப்பட்டுள்ளமையை அறியலாம். மாணவர்களுக்கு ஒழுக்கம், பண்பு, ஆற்றல், ஊக்கம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி, வாழ்க்கை, பொது அறிவு என அனைத்தையும் கற்பிப்பவர்கள் ஆசிரியர்கள். ஆசிரியர்கள் என்றும் வணக்கத்துக்குரியவர். நீளநினைந்து வாழ்நாள் முழுவதும் நன்றியோடும் உரிமையோடும் வாழ்த்தும் தகுதிக்குரியவர்கள் ஆசிரியர்கள். எதிர்காலச் சந்ததியின் பொறுப்பைத் தாங்கி நிற்பவர்கள் ஆசிரியர்கள். ஆசிரியத்துவம் அற்றுப்போவதாகச் சிலர் எழுதுகிறார்கள். ஆசிரியத்தவம் நவீன கற்பித்தல் வடிவங்களால் மாறி நின்றாலும் ஆசிரியம் அருக வாய்ப்பேயில்லை. திருவள்ளுவர் உழவுத்தொழிலை முதன்மைப்படுத்திப் பெருமை கூறியவர் கல்வியாளனை மிக உயரத்தில் நிறுத்தத் தவறவில்லை.

வில்லேருழவர் பகை கொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை

எனக் குறிப்பிடுகிறார்.

PUBLIC L... JAFFNA

வில்லெடுத்துப் போர்புரியும் வீரனின் பகையைப் பெற்றாலும் சொல்லாற்றல் மிக்க கல்வியாளன் பகையைக் கொள்ளக்கூடாது என்கிறார் வள்ளுவர். அறிவுடைய சமூகத்தின் முதல்வர்களே ஆசிரியர்கள். அவர்களை யாரும் எக்காலத்திலும் எதிர்க்கக்கூடாது என்பது தர்மங்கள் கூறும் நியதி. ஆசிரியர்களுக்குரிய கடமைகளை தர்மசாஸ்திரங்கள், இதிகாசங்கள் அறநூல்கள் நன்கு எடுத்துரைத்துள்ளன. ஆசிரியப்பணி என்பது காலவரையறையற்றது. ஆசிரியர் இறப்புக்குப் பின்னாலும் நேசிக்கப்படுபவர் என்பதால் அப்பணியில் ஈடுபடுபவர்கள் சீராகத் தம்பணி தொடரவேண்டும். ஆசிரியத்துவம் பற்றி ஓர் கவிஞன் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்.

கல்லும் உடையாமல்
சிலையும் சிதறாமல்
எங்களைச் செதுக்கிய
சிற்பி அல்லவா நீங்கள்

ஆசிரியர்களின் மேன்மை அளவிட்முடியாதது. எழுத்தறிவித்த இறைவனை நாம் மறக்க இயலாது. எமது ஆற்றலின் இயக்க சக்தியாக, சகல வெற்றியாளரின் எரிபொருளாக ஆசிரியரே விளங்குகிறார். ஆசிரியர்களை மதியாதவர்கள் வாழ்க்கையில் வெற்றிபெற்றதாகச் சரித்திரம் இல்லை.

ஆசிரியப்பணியில் இணைபவர் தர்மத்தின் வழியில் நடத்தல் வேண்டும். நடை, உடை, பாவனை அனைத்திலும் ஆசிரியத்துவத்துக்குரிய ஆளுமைப் பண்பு வெளிப்படல் வேண்டும். ஆசிரியப் பணி தொழில் அல்ல, தொண்டுப்பணி. ஊதியத்துக்காக உழைக்கும் பணியல்ல. உயிர்களை ஆற்றுப்படுத்தும் பணி. தெய்வீகப் பணியில் ஈடுபடும் வாய்ப்புப் பெற்றவர்கள் பாக்கியசாலிகள். உங்கள் பொறுப்பின் மேன்மையை இயன்றவரை காப்பாற்றுங்கள். ஆசிரியர்களை வணங்குவதால், வாழ்த்துவதால் நாம் புனிதமடைவோம். எமது பாரம்பரிய மரபுகள் அழியாதவை. அந்நெறியில் நின்று ஆசிரியர்களை ஆசிரிய தினத்தில் மட்டுமன்றி அனுதினமும் வாழ்த்தி வணங்குவோமாக.

**- ஆசிரியர்**

உ

# நவராத்திரி

## கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

சக்தி வழிபாடு மிகத் தொன்மையானது. சக்தியை நாயகியாகக் கொண்டு நடைபெறுவது நவராத்திரி விழா. துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி என்னும் முப்பெருந் தேவியர்களை நோக்கிப் பூசை, வழிபாடு, விரதம் அனுட்டித்தல், விழாவெடுத்தல் என்பன நவராத்திரி காலங்களில் நிகழ்த்தப் படுகின்றன. சகல உலகங்களையும் படைத்து அவற்றையெல்லாம் இயக்கி, காத்து வருகின்ற மாபெருஞ் சக்தியை, மகாசக்தி என்றும் ஆதிபராசக்தி என்றும் நம் முன்னோர்கள் கொண்டு அச் சக்தியைப் பயபக்தியோடு வழிபட்டு வரலாயினர். இது இந்துப் பண்பாடாக வளர்ந்து இன்றும் இந்து மக்களால் கைக்கொள்ளப்பட்டு வருகிறது. சக்தி தத்துவத்தைச் சாக்தம் என்று அழைக்கின்றனர். சாக்தம் அறுவகைச் சமயங்களுள் ஒன்றாகவும் வகுக்கப்பட்டுள்ளது. சைவம், வைஷ்ணவம், கானாபத்யம், கௌமாரம், சௌரம் என்பன ஏனையவை. இந்து சமயம் கொண்டுள்ள ஆறு உட்பிரிவுகளாகவே அவற்றை ஆதிசங்கரர் குறிப்பிடுகிறார். சாக்தம் ஒரு காலத்தில் பாரத தேசம் முழுவதிலும் தனித்துத் தனிநெறியாக விளங்கியது. அதன் சுவடுகள் சிற்சில பகுதிகளில் இன்றும் காணப்படுகின்றன. ஆயினும் பின்னர், மற்றைய நெறிகளுடன் கலந்து, சமய வேறுபாடின்றி சக்தியையும் வழிபாடு செய்தல் முறை ஏற்பட்டுவிட்டது. சிவனின் தேவியாகவும்; விஷ்ணுவின் சகோதரியாகவும்; விநாயகன், முருகன் ஆகியோரின் தாயாகவும் பராசக்தி விளங்கும்போது வைதீக சமயங்களுக்கிடையே பேதம் இருக்கவேண்டிய அவசியம் இல்லாமற் போய்விட்டது. தற்காலத்தில் புறச் சமயிகளும் கலந்து கொள்ளுமளவிற்கு நவராத்திரி விழா தேசிய விழாவாகி வருகிறது. கோயில்கள், வீடுகள், பொது மன்றங்கள், பாடசாலைகள், அலுவலகங்கள், வேலைத் தலங்கள், கலா நிலையங்கள் போன்ற பல்வேறு இடங்களிலும் இன, மத, மொழி வேறுபாடின்றி நவராத்திரி விழா கொண்டாடப்பட்டு வருகிறது. நாட்டின் பல்லின, பலமொழி, பல்சமய மக்களிடையே ஐக்கியத்தையும், தேசிய ஒருமைப்பாட்டினையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தக்கூடிய சிறந்த ஊடகமாக, நம் நாட்டில் நவராத்திரி விழா அமைவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

சக்தி என்றாலே ஆற்றல், வல்லமை, வலு, உந்துவிசை என்று தான் பொருள் கொள்கின்றோம். இந்த வகையில் நோக்கும்போது சக்தியின்றேல் எவருக்குமே வாழ்வில்லை, இயக்கமில்லை என்ற நிலை வந்துவிடுகிறது. சக்தியை வேண்டி நிற்பவர்கள் இவர்கள்; சக்தியை வேண்டி நில்லாதவர் மற்றையோர் என்று குறிப்பிடுவதற்கில்லை. எல்லோருக்கும் சக்தி வேண்டியதே என்பதே உண்மை நிலை. இந்து மக்கள், எல்லாவகைத் தோற்றத்திற்கும், இயக்கத்திற்கும், அவற்றின் வாழ்விற்கும் ஆதாரமாகவும், அடிப்படையாகவும் அமைந்துள்ள மகாசக்திக்கு, தெய்வ வடிவம் கொடுத்து, மிக உயர்ந்த நிலையினை வழங்கி விழாவெடுத்து,

வழிபாடு செய்வதில் மனத்திருப்தி பெற்று வருகின்றனர். நவராத்திரி விழாவும் மகாசக்தியைப் பல்வேறு தெய்வ வடிவங் களில் கண்டு களித்து, வணங்கி வழிபட்டு, அழகு அலங்காரங்கள் செய்து, பக்தி செலுத்தி, கலைகளைச் சமர்ப்பித்து ஆராதிப்பதாகவே அமைகின்றது. இத் தெய்வீக விழாக்களையும், சடங்கு சம்பிர தாயங்களையும், பக்தியும் அழகும் சொட்டும் வண்ணம், பெருஞ்செலவு செய்து உலகியல் கண்ணோட்டத்தில் செய்து பார்ப்பதில் எத்துணை ஆனந்தமும் மன நிறைவும் அடைகின்றார்கள் என்பது அதில் ஈடுபாடு கொண்டு திளைத்தவர்களுக்குத்தான் புரியும். அகிலாண்ட நாயகியாகிய அம்பிகை விருப்பு வெறுப்புஅற்றவள்; அளவிடமுடி யாதவள்; ஆத்மாவாக இருப்பவள்; முதற் காரணமான சக்தி; சகல பிருமாண்டங் களையும் ஈன்ற தாய்; கருணைக் கடல்; ஞான உறவினள், பிரும்மானந்த வடிவினள், அத்தகைய சிறப்புக்களை உடைய அன்னையை, மூவுலகங் காப்பவளை, அபிராமவல்லியை, அண்ட மெலாம் பூத்தாளை, பரம ஈஸ்வரியை புவன ஈஸ்வரியை, தாங்கள் பணிந்து வழிபடு வதும், விழாக்கள் எடுப்பதும் நமது மகிழ்ச்சிக்காவும் உய்விற்காகவுமே ஆகும்.

உலக மாதாவாகிய அம்பிகையின் கண்களின் அசைவில் தான் காலங்கள் தோன்றி இயங்குகின்றன என்கிறார் ஆதிசங்கரர். ஈரேழு புவனங்களையும், எண்ணற்ற உயிரினங்களையும், நான்கு மறைகளையும், சகல கலைகளையும் தன்னுள் அடக்கி வைத்திருப்பவன் சிவன். அத்தகைய அரன், தேவி பாகத்தினுள் அடக்கம். அப்படியாயின் அம்பிகையின் அருமை பெருமைகளை வார்த்தைகளில் வடிக்கவும் முடியுமா?

மனிதர்களுக்கு இயல்பாகவே ஒரு வேட்கை இருந்து வருகிறது. அது என்னவெனில், சகல வல்லமைகளும் பொருந்திய கடவுளர்களை, உலகியல் கண்ணோட்டத்தில் வைத்து, அவர்களுக்குப் பிறந்த தினம், பூப்பு நீராட்டல், திருமணம் மற்றும் பல்வேறு சடங்குகள், விழாக்கள் ஆகியவற்றை மனிதர்களுக்குச் செய்யு மாப்போல, நிகழ்த்திப் பார்க்கவேண்டும் என்பதேயாகும். மேலும், உலகியல் விடயங்கள் ஒவ்வொன்றிற்கும் பொறுப் பாகவும்; அதிபதிகளாகவும், தெய்வங்களை நியமிக்கும் பாங்கும் மக்களிடையே இருந்து வந்துள்ளது. இந்த வகையிலேயே வீரத்திற்குத் துர்க்கையையும், செல்வத் திற்கு இலக்குமியையும், கல்விக்குச் சரஸ்வதியையும் பொறுப்பாளர்களாகவும் அதிபதிகளாகவும் கொள்கின்றனர். இம் மூவரும் ஆதிபராசக்தியின் அம்சங் களாகவே போற்றப்படுகின்றனர். நவ ராத்திரி விழாவின்போது, துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய தெய்வங் களுக்கு, முறையே முதல் மூன்று நாட்களும், நடு மூன்று நாட்களும், இறுதி மூன்று நாட்களும் விழா எடுக்கின்றனர். பக்தி யுடன், அழகு அலங்காரங்கள் கொலு வைத்தல், கலைநிகழ்ச்சிகள், சுவையான உணவுகள் என்பன முக்கிய இடம்பெறு கின்றன. இவற்றிற்காகப் பணம், பொருள், காலம், சக்தி என்பன செலவு செய்யப்படு கின்றன. இவற்றை வீண் செயல்கள் என்றோ, கேளிக்கைகள், களியாட்டங்கள் என்றோ கூறுவதற்கில்லை. விளங்கிக் கொள்ள முடியாத இறைவனின் தத்துவங் களுக்கு மனிதர்கள் தம்மால் இயன்ற

வரைக்கும், அவற்றை உருவகப்படுத்தி தமது அறிவிற்கெட்டிய வகையில், உலகியல் பார்வையில் விளக்கங்களைக் காண முயலும் கருமங்களாகவே அவை உள்ளன. மேலும் இவற்றிற்குரிய பிரதிபலன்களை இவற்றை நடத்துபவர்கள் பெற்றுக் கொண்டுதான் இருக்கிறார்கள். அம்பிகையின் கடைக்கண் பார்வை மட்டும் கிடைத்துவிட்டாலே சகல ஐசுவரியங்களும் பெறப்பட்டுவிடும் எனும் அசையாத நம்பிக்கையும் மக்களிடம் நன்கு வேரூன்றியுள்ளது. மக்கள் ஒருவித இனம்புரியாத சுகத்தையும், மனநிறைவையும் அடைகிறார்கள் என்பதில் ஐயமில்லை. சிற்றின்ப சுகமாக இருப்பினும், மனிதன் ஈற்றில் அடையவிரும்பும் பேரின்ப சுகத்திற்கு அவை வழிவகுக்கின்றன. எனவே நவராத்திரி விழாக்கள், மக்கள் மனங்களைப் பண்படுத்தி, வாழ்க்கையை நம்பிக்கையோடு எதிர் கொள்ளச் செய்வதற்கும், “மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே” என்ற நிலைக்கு அவர்களை இட்டுச் செல்வதற்கும்; மண்ணில் தெய்வங்களின் அருள்பெற்று நல்ல வண்ணம் வாழ முடியும் என்ற நம்பிக்கை ஒளியை மக்கள் பெற்றுக் கொள்ளச் செய்வதற்கும் பெரிதும் உதவுகின்றன. இந்த முறையில் இந்துப் பண்பாடு, இந்து கலாசாரம் என்பன பன்னெடுங்காலமாக வளர்ச்சி பெற்றும், மக்களை வாழ்வித்தும் வந்துள்ளமை நோக்கற்பாலது. எமது காலத்திலும், இத்தகைய இந்துப் பண்பாடு போற்றி வளர்க்கப்பட வேண்டியதும், பேணப்பட்டு அடுத்த சந்ததியினருக்கு வழங்கப்படவேண்டியதும் நமது கடமையாகும். பாடசாலைகளில் நவராத்திரி விழாவினைக் கொண்டாடுவதன் மூலம் இக்குறிக்கோளை நன்கு அடையமுடியும். இந்துப் பண்பாடு, இந்து சமய விழுமியங்கள் ஆகியவற்றை இளவயதிலிருந்தே மாணவர்களிடம் வளர்க்கும் பொறுப்பினைப் பாடசாலைகள் ஏற்றுக்கொள்ளவேண்டியது அவசியம். இன்றைய அவசர உலகில், குடும்பமோ ஏனைய சமூக நிறுவனங்களோ இப் பொறுப்பினை ஏற்கக்கூடிய நிலையில் இருப்பதாகப் பெரும்பாலும் தோன்றவில்லை.

ஆண்டுதோறும் புரட்டாதி மாதத்தில் வருகின்ற அமாவாசையை அடுத்து முதலாவது நாள் பிரதமை தொடக்கம் நவமி ஈறாக உள்ள ஒன்பது நாட்கள் நவராத்திரி காலம் ஆகும். பத்தாம் நாள் தசமித்திதி, விஜய தசமி எனப்படும். விரதம் அனுட்டிப்பவர்கள் நவராத்திரி தொடங்குவதற்கு முதல் நாள் அமாவாசையன்று ஒரு நேரம் மட்டும் உணவுண்டு, தொடங்கிய நாளிலிருந்து எட்டு நாட்கள், பழம் அல்லது இளநீர் அல்லது பால் இரவில் அருந்தி மகா நவமியன்று முழுநாளும் உபவாசம் இருந்து பத்தாம் நாள் விஜயதசமியிலன்று உணவு உட்கொண்டு பாராணம் செய்வர். இவ்வாறு மேற்கொள்ள இயலாதவர்கள் ஒவ்வொருநாளும் ஒரு நேர உணவுண்டு, நவமியில் உபவாசம் இருந்து மறுநாள் தசமியில் உணவுட் கொண்டு விரதத்தை நிறைவு செய்வர். குறிப்பாகக் கல்வி கற்கின்ற மாணவர்கள் இவ்விரதத்தை அனுட்டிப்பதால் நல்ல பயனை அடைவர். விரத நாட்களில் அகத்தூய்மை, புறத்தூய்மையுடையவராய், கடவுள் சிந்தையுடன் வாழப் பழகிக்கொள்ளுதல் வேண்டும். தூய எண்ணங்கள், பண்பான பேச்சு, நற்செய்கைகள் மூலம் தம்மை ஒரு

சிறந்த மானுடன் ஆக்கிக்கொள்வது விரதத்தின் நோக்கம்.

வீடுகளிலும் நவராத்திரி விழா கொண்டாடப்படுகிறது. ஒன்பது கன்னிப் பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு நாளுக்கு ஒருவராக அவர்களை நீராட்டி, புத்தாடை புனைந்து, மாலை அணிந்து; வாசனைப் பொருட்கள் மற்றும் கண்ணாடி, குங்குமம், மஞ்சள், சந்தனம் முதலிய மங்கலப் பொருட்கள் ஆகியவற்றை வழங்கி வழிபாடு செய்யும் வழக்கமும் உண்டு. இவர்கள் இரண்டுக்கும் பத்துக்கும் இடைப்பட்ட வயதினராக இருப்பர்.

இன்னொரு முக்கியமான அம்சம் நவராத்திரிக் கொலுவைத்தல் ஆகும். இது ஓர் அழகு அம்சம். நவராத்திரி விழாவில் அழகு ஆராதிக்கப்படுகிறது. எல்லாமே ஒழுங்காக இருக்கும்போது, அங்கு அழகு மிளிர்கிறது. பேரழகும் பேரெழிலுமாக காட்சி தருகின்ற அம்பிகையைக் கொலு பீடத்தின் நடுவில் வைத்து, சூழவும் அழகுப் பொம்மைகளையும், தெய்வச் சிலை களையும் மற்றும் பொருட்களையும் ஒழுங்காக அடுக்கி வைத்து, அழகு செய்து, வழிபாடு செய்வர். மாலை வேளையில் அண்டை அயலவர்களையும் அழைத்து; அவல், கடலை, பலகாரங்கள், சுவை உணவுகள், பழங்கள் ஆகியவற்றை அம்பாளுக்கு நிவேதித்து; ஆடல் பாடல் நிகழ்த்தி வழிபடுவர்.

கிருஷ்ணன், நவராத்திரியின் முதல் நாள் கைடவன், மது என்னும் இரு அசுரர்களைக் கொன்றான். அநீதியை அழித்து நீதியை நிலைநாட்டி வைத்த மையைக் குறிப்பதாக நவராத்திரி நோன்பும், அதன் நினைவாகக் கொலுவில் பொம்மைகளை வைத்து அழகு செய்வதும் நடைபெறுவதாகக் கூறுவர்.

நவராத்திரி என்றும், தேவி பூசை என்றும், வாணி விழா என்றும், ஆயுத பூசை என்றும், மகா நவமி நோன்பு என்றும் பற்பல பெயர் கொண்டு அழைக்கப் படுகிறது. நவராத்திரி இறுதி நாளன்று புத்தகங்கள், பென்சில் பேனாக்கள், வீணை முதலிய இசைக்கருவிகள் மற்றும் கலையோடு தொடர்பான பொருட்கள் யாவற்றையும் பூசையில் வைத்து சரஸ்வதியை வழிபடுவர். அடுத்த நாள், தசமியன்று காலையில் இவற்றை எடுத்துப் படித்தும், எழுதியும், இசைக்கருவிகளை மீட்டியும் நாள் வேலையைத் தொடங்கும் வழக்கமும் இருந்து வருகிறது. விஜயதசமி யிலன்று பிள்ளைகளுக்கு ஏடு எழுதுதல் அல்லது வித்தியாரம்பம் செய்து வைக்கப் படுகிறது. இதை ஒரு சடங்காகவே அன்று நிறைவேற்றுவர். நவராத்திரி காலங்களில் அம்பாளைக் கும்பத்தில் பூஜிப்பர். பத்தாம் நாள் தசமியில் அன்று கும்பத்தை எடுத்து அதனுள் உள்ள நீரை ஓர் புனித இடத்தில் சேர்ப்பர். இதனைக் கும்பச் சரிவு என்பர். நவதானியங்கள் விதைக்கப்பட்டு, அதன் மேலேயே கும்பத்தை வைப்பது வழக்கம். நவதானியங்கள் பத்தாம் நாட்காலையில் நன்கு முளைவிட்ட நிலையில் இருக்கும். இம் முளைகள் சூடுவதற்காக வழிபடு பவர்களுக்கு வழங்கப்படும்.

பத்தாம் நாள் மகா நோன்பு முடிவடை கின்றது. இதனை மானம்பு என்று திரித்துக் கூறுவர். கோயில்களில் வன்னி, வாழை வெட்டும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. அம்பாள் எழுந்தருளி வீதி வலம் வந்து,

வாழை மரம் வெட்டும் வழக்கம் இருந்து வருகிறது. விஜயதசமியில் அம்பு போடுதல் என்று இதனைக் கூறுகின்றனர். மடமையின் உருவான மகிஷாசுரனை அம்பாள் அழித்த, வெற்றித் திருநாளாக விஜயதசமி கொண்டாடப்படுகிறது. அறியாமையை அகற்றிய இந்த நன்நாளில், அறிவை நாடிச் செல்லும் முதல் நிலையாக வித்தியாரம்பம் செய்தல் எத்துணை பொருத்தமான செயல் என்பதும் உணர்த்தற்பாலது.

அன்னையின் துர்க்கை வடிவம் எம்மிடமுள்ள அசுரக் குணங்களையும், விலங்கு மனத்தினையும், அரக்கத் தன்மைகளையும் அகற்றி எம்மைச் சாத்வீகம் நிறைந்த மனிதர்களாக்கி மண்ணில் நல்லவண்ணம் வாழ்விக்கிறது. துர்க்கை தரும் வீரம், பாவங்களை விலக்குவதற்கு எமக்குவேண்டிய துணிவினைத் தருகிறது. மகாலட்சுமி வடிவம் மனித வாழ்வில் ஒழிக்கப்படவேண்டிய வறுமையை அழிப்பதற்கு செல்வத்தை நமக்கு வழங்கி எம்மை வாழ்விக்கிறது. ஈதல் அறம் என்பதை உணா்ந்து செல்வத்தைப் பெற்று பிறரின் வறுமையையும் போக்கும் போதுதான் அன்னை மகாலட்சுமி மனம் மகிழ்கிறாள். சரஸ்வதி வடிவம், மனித வாழ்வில் இடம்பெறக்கூடாத அறியாமையை அகற்றி அறிவொளி ஏற்றி மக்களை வாழ்வாங்கு வாழ வழிவகுக்கிறது.

வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றும் மனித வாழ்க்கைக்கு முக்கியமானவை. வாழ்க்கையில் இம்மூன்றையும் அடைவது அதன் குறிக்கோள். இம்மூன்றினதும் ஒருங்கிணைந்த வளர்ச்சி, மனிதனில் நிகழும்போதுதான் அவன் பூரணத்துவம் பெற்ற முழு மனிதனாக, நிறை மனிதனாக, இன்னும் சொல்லப்போனால் ஆளுமை நிறைந்த மனிதனாக ஆக்கம் பெறுகின்றான். வீரம், செல்வம், கல்வி ஆகியவற்றின் முழுமையான வளர்ச்சி மாத்திரம் ஒருவனைச் செம்மையான நிறைமனிதன் ஆக்கிவிடமாட்டா என்பது இந்து சமயக் கொள்கை. வீரத்தின் பெரு வளர்ச்சியும், செல்வத்தின் பெருவிருத்தியும், கல்வியின் மிகைப் பெருக்கமும் விலங்கு இயல்பு கொண்ட மனிதன் ஒருவனில் ஏற்படுமாக இருந்தால், விளைவு நன்மையாக இருக்கமாட்டாது; மாறாக மனிதகுல நாசத்திற்கே வழி வகுப்பதாக அமையும். எனவேதான், இந்துசமயம், தெய்வங்களோடு வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றையும் பொருத்திக் காட்டுகிறது. வீரம், செல்வம், கல்வி ஆகியவற்றின் வளர்ச்சியும், பெருக்கமும், தெய்வத் திருவருளினால் கிடைக்கப் பெற்றமையை மனிதர்கள் உணர்வதாலும், அதற்காகத் தெய்வங்களுக்கு நன்றி தெரிவிப்பதாலும் ஏற்படுகின்ற நன்மை யாதெனில் வீரத்தையும், செல்வத்தையும், கல்வியையும் பிரயோகிக்கும் போதும், பயன்படுத்தும்போதும், இறை சிந்தனையுடன் அவர்கள் செய்வதே யாகும். இறைவனை நினைத்து ஆற்றப்படும் கருமங்கள் நிச்சயம் கைகூடுவதோடு, நல்ல விளைவுகளையும் தருகின்றன. எனவேதான், வீரம், செல்வம், கல்வி என்பவற்றின் வளர்ச்சி, இறைசிந்தனையின் அடிப்படையில், திருவருட் பேறாக, தூய்மையின் வடிவமாக மனிதர்களில் ஏற்படவேண்டுமென்று இந்து சமயம் வலியுறுத்துகிறது. இந்த வகையில் எழுந்தது தான் நவராத்திரி வழிபாடும், விரதமும், விழாவும் ஆகும்.

உ

# அரனாரிடத்தில் அந்தண அரிவையர்க்கு அரும்பிய ஆர்வம் அளவின்றால்

சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

( சென்ற இதழ் ஒளித் தொடர்ச்சி... )

உடம்பில் மயக்கம் பரவியது. மேனி எங்கணும் மன்மதன் தூவும் அம்பு மொய்த்தது. உயிர் ஊசலாடியது. தனங்களிலிருந்து பாய்கின்ற பாலாகிய நீரைப் போல மயிர்க்கால் தோறும் காமநீர் ஒழுகக் கலுழுகின்றார்கள் சில கன்னியர்கள்.

**ஏமம் பாயமெய் யெங்கணுங் காமவே**
**ளும் பாயவை சூழ்ந்துயிர் வாட்டிட**
**வாமம் பாய்புனல் போன்மயிர்க் காறொறுங்**
**காமம் பாயக் கலுழுகின் றார்சிலர். (53)**

பாசமாகிய மலம் நீங்கப் பெற்று அடையக் கடவதாகிய பரமபதம் இஃதென்று கண்டு அப்பரமபதத்தின் மீது ஆசையோடு பத்தி பண்ணுவார்கள் போல ஆடையை இழந்து வளையல் கழன்று நக்கருடைய அந்தரங்க அவயவத்தை அவதானித்துச்சில பெண்கள் கும்பிடுவார்கள்.

**பாச நீங்கிப் பரபத மீதென**
**வாசை யோடுகண் டன்புசெய் வாரென**
**வாச நீங்கி வளையுகுத் தையர்தங்**
**கோச நோக்கினர் கும்பிடு வார்சிலர். (54)**

இளமைச் செவ்வியோடு வருகின்ற எம்பெருமான் மீது வைத்த வேட்கையால் விரக தாபத்துடன் விரைந்து சென்று பாலுந் தயிரும் மிக்குக்கலந்த அன்னத்தை அழகிய கையினின்றும் வீழ்ந்த வளையலோடு சேர்த்துப் பிச்சையாக இடுகின்றார்கள் சில பெண்கள்.

"இந்த அழகிய நெற்றிக் கண்ணராகிய நக்கர் பெண்கள் எதிரே ஆடையின்றிப் பிச்சைக்கு வருகின்ற தன்மையினால் விரும்பி பிச்சை இடச் செல்கின்ற எமக்கு நமது ஆடை நழுவி வீழினும் வீழ்க. இது ஒரு குற்றமாமோ" என்று குறித்துக் கூறுவார்கள் சில பெண்கள்.

நாணம் நழுவியது, மயக்கம் மயக்கியது. உள்ளம் உருகுகின்றது. கற்பு காற்றில் பறந்தது. அரிய உயிர் அழியும். உடல் ஒழியும். ஏழையேங்களுக்கு எங்கள் உயிரை ஈயும். என்று இரப்பார்கள் சில பெண்கள்.

"இத் தபோதனர் இரப்பது அரிசி என்று அரிவையர்கள் கருதினார்கள். அரிசியை எடுத்துக்கொண்டு அவரருகில் அணுகினார்கள். சுவாசிக்கின்ற காமாக்கினி அரிசியைத் தகித்தது. அரிசி அழகிய நீறானது. சிவபெருமானைப் போல அரிசிப்பொடி நீற்றை அணிந்து கொண்டார்கள் சில பெண்கள்.

"எம்மை ஆண்டு அருளும் என்று அடிகளில் வீழ்ந்து வணங்கினாலும்

அருளைச் செய்கின்றார் இல்லை. இவர் எண்ணம் வடிவினால் எம்மை மயக்கம் உறும்படி செய்து விரைவில் இவ்விடத்தை விட்டு வெளிப்போவது போலும். ஆகை யால் இவருக்குப் பிச்சை இடாதீர்கள்" என்று சில பெண்கள் பேசுகின்றார்கள்.

பெண்களில் சிலர் முத்து வடம் அற்றார்கள். சந்தனப் பூச்சு இழந்தார்கள். மன்மத பாணத்தால் வலி இழந்தார்கள். மேகலாபரணப் பாரமும் இழந்தார்கள். பாரங்கள் எல்லாவற்றையும் மாற்றினார்கள்.

"இவரிடம் சூலம் இருக்கிறது. நெற்றி மேல் நெருப்புக்கண் இருக்கிறது. படர் சடை இருக்கின்றது. மேனி செம்மை படர்ந்திருக்கின்றது. இளம்பிறை விளங்கு கின்றது. அதனால் இவர் நஞ்சுண்ட சிவபெருமானேயாவர்" என்பார்கள் சில பெண்கள்.

"எம்பெருமானுடைய பெருமை பொருந் திய குறியினிடத்து நின்று சிந்துகின்ற ஒரு அருட்டுளி அல்லவோ திருமா லுடைய உந்திக் கமலத்தில் பொருந்தி உலகம் அனைத்தையும் படைக்கின்ற அந்த நான்குமுகக் கடவுள் ஆனான்" என்று உரைப்பார்கள் சில பெண்கள்.

"சங்கையும் சக்கரத்தையும் தரித்துக் கொள்ளாமல் பொங்கும் காமரத்தையும் பொன்னாடையையும் நீக்கி துங்க மாதவர்கள் மதி மயங்க அங்கண் செல்லும் திருமாலாகிய மோகினிக்கு ஒப்பானார்கள் சில பெண்கள்.

கட்டப்பட்ட செஞ்சடைக் கண்ணியி னுள்ளே பட்டமானைப் போல வைத்த கண்ணை வாங்காது நின்றார்கள் பெண் கள். அகப்பையில் ஏந்தி வந்த அன்னத்தை வெற்றிடத்தில் இட்டு வெட்கமடைவார்கள் சில பெண்கள்.

திலோத்தமையாகிய கிளியின் மேல் ஆசை மிகுதியினால் பின் தொடர்ந்து செல்லும் நிறம் விளங்கா நின்ற பிரமா வாகிய அன்னமும் மோக வெறி உந்து தற்குக் காரணமாகிய பேரழகைக் கொண்ட காள கண்டரான பிச்சாடனரது உரு வெளித் தோற்றத்தையும் உண்மைத் தோற்றத்தையும் பிரித்து உணரமாட்டாமல் புத்தி பேதலிப்பார்கள் சில பெண்கள்.

**கிளியின் மேற்செலும் கேழ்கிள ரோதிமங்**
**களிமயக்குறு காளகண் டத்திறை**
**வெளியின் மேனியு மெய்ப்படு கோலமுந்**
**தெளிகி லாது தெருமரு வார்சிலர். (63)**

அன்போடு அமைத்த அன்னம் அறு சுவைக் கறிகளை எடுத்துக் கொண்டார்கள். மோகம் முன் செலுத்தச் சென்றார்கள். ஒளிக்கும் ஒளியாக இருப்பவராகிய சிவ பெருமானுடைய உருவெளித் தோற்றத் திற்கு விரைந்தளிப்பார்கள் சில வனிதா மணிகள்.

சிவபெருமானுடைய திருமேனியைத் தரிசித்தார்கள். ஆசை கொண்டார்கள். ஆடை நழுவினார்கள். பெண்மையின் அடையாளமாகிய பெருங்குறியை மூடி னார்கள். கைக்கடங்காமையினால் கண் களை மூடினார்கள். ஆகாயத்தை மறைக்க எண்ணியவர்களைப் போல ஏமுற்றார்கள் சில பெண்கள்.

**அண்ணன் மேனிகண் டார்வமுற் றாடை போய்ப்**
**பெண்ணி னீர்மைப் பெருங்குறி மூடியும்**

**கண்ணை மூடியுங் கைக்கடங் காமையால்**
**விண்ணை மூடினர் போல்வெள்கி னார்சிலர். (68)**

"விருத்தராய் இவ்விடத்து வந்து ளீர்கள். தேவாமிர்தம் போலும் ஒப்பற்ற உணவு உளது. அதனை அருந்துங்கள். எமக்கு நல்லருளைச் செய்யுங்கள். ஒரு பொழுது காலம் கடந்து செல்லுங்கள்" என்று வேண்டுவார் வேயுறு தோளிர் சிலர்.

"கையிலேந்தும் உணவுப் பாத்தி ரத்தையும் சூலத்தையும் ஓரிடத்தில் வையுங்கள். எங்கள் மனைக்கு எழுந்தரு ளுங்கள். பாலும் நெய்யும் பரிமளிக்கும் உணவினை நாளும் உண்ணலாம். நாங்கள் உய்யவேண்டி நீங்கள் இங்கு இருங்கள்" என்று வேண்டுதல் விடுப்பார்கள் சிலர்.

"உம்மைப் பார்க்கும் பெண்கள் பல திறத்தவர்களான ஆடவர்களுக்கும் மோகத்தை உண்டுபண்ணும் வடிவுள்ளீர். ஓடு ஒன்றினைக் கையில் ஏந்திக் கொண்டு எங்கும் பிச்சை ஏற்பது என்னையோ?" என்று இரங்குவார்கள் சில ஏழைமார்கள்.

"நக்கராகிய உம்மைக் கண்டோம். நாமும் ஆடை நழுவப்பெற்றோம். காதலில் கரைந்து ஓய்ந்து போனோம். இது நல்ல சமயம். ஏழையேங்களை ஏன்று கொள்வீர்" என்று நெடுமூச்சு விடுவார்கள் சில பெண்கள்.

**இன்று மைக்கண்டு யாங்களு மாடை போ**
**யொன்று காதலுற் றோய்ந்த மிங்கிது**
**நன்று கூடுதிர் நங்களை நீரென**
**நின்று கூறி நெடிதுயிர்த் தார்சிலர். (71)**

தவம் வளரும் இந்தத் தபோவனத்தில் தவத்தர்களான முனிவர்கள் இவ்வேளை இங்கு வாரார். உள்ளத்தில் ஒன்றையும் உன்னாதீர்கள், சயனம் உண்டு. ஓரிறைப் போது வாருங்கள், தங்கிச் செல்லுங்கள் என்று சாற்றினார்கள் சில பெண்கள்.

**நந்து மிவ்வன நண்ணிய மாதவ**
**ரிந்த வேலையி லேகலர் யாவதுஞ்**
**சிந்தை கொள்ளலீர் சேக்கையுண் டோரிறை**
**வந்து போமென வாய்மலர்ந் தார்சிலர். (72)**

"எங்களை முனிபத்தினிகள் என்று எண்ணியோ விரகதாபத்தை வெளிச் சொன்னாலும் மறுமாற்றம்மறுக்கின்றீர். பாவமானது ஏனையோரிடத்துப் போல உம்மையும் அணுகுமோ.... அணுகாது, எம்மை அணைந்து ஆளும் என்று எடுத்தியம்புவார்கள் சில பெண்கள்.

"நழுவிய நல்லாடையைத் தந்தருளும். தாராதொழிந்தால் எம்மை விழுங்கும் விரகதாபத்தை வீழ்த்தும். ஒன்றும் உரை யாதீரெனில் கூட வாரும் உம் குறிப்பு ஏது? என்று ஏம்பலிப்பார்கள் சில பெண்கள்.

**ஆடை தாரும தன்றெனிற் கொண்டதோர்**
**வேடை தீரும் விளம்புகி லீரெனிற்**
**கூட வாருங் குறிப்புமக் கென்னெனப்**
**பாடு சேர்ந்து பகர்ந்திடு வார்சிலர். (74)**

"உமக்கு இவ்வழகிய வடிவத்தினாற் செய்யுஞ் செயல் வீதியில் நடமாடும் நங்கையரைக் கொல்லுகின்றதோ? பிச்சை கொள்வதோ? சொல்லும் என்று பின் தொடர்ந்தார் சில பெண்கள்.

*(மிகுதி அடுத்த ஒளியில்...)*

# கூடும் அன்பினிற் கும்பிடப் பெற்றவர்

**சிவத்தமிழ்ச்செல்வி**
**தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்**
*ஆசிரியர்,*
*யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.*

'வாய்த்தது நம் தமக்கீதோர் பிறவி' என்பதை மதித்து வாழ்பவரே மனிதருள் மாணிக்கங்களாகத் திகழ்கின்றனர். அத்தகைய பெருமக்களில் முன்னணியில் வைத்தெண்ணப்படும் சிறப்புக்குரியவர் அமரர் ஜயரத்தினம் அவர்கள். வாழ்வின் குறிக்கோளை அறிந்து இலட்சியமான பாதைவழிச் சென்று ஈடேற்றம் பெற்ற இணையற்ற உத்தமர் அவர். உத்தம குணங்கள் வாய்க்கப்பெற்ற தந்தையாரின் சிறந்த எச்சமாகத் திகழ்ந்தார் என்று பேரறிஞர்கள் பலர் போற்றிப் புகழ்ந்திருப்பது முற்றிலுமுண்மை. 'தம்மிற்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது' என்ற குறட்பாவுக்குதாரணமாக எடுத்துக் காட்டிப் புகழுதற்குரியர். இவர் ஆரம்ப காலத்தில் உத்தம மாணவராகவும் இடைக் காலத்திற் சிறந்த ஆசிரியராகவும் அதன் பின்பு சகல தகுதி மேம்பாடும் பெற்ற அதிபராகவும் இறுதிக் காலத்தில் சிறந்த பக்தராகவும் விளங்கினார். மானிடப் பிறவியில் ஈட்ட வேண்டிய அத்தனை பேறுகளையும் பெற்று முழு மனிதராகப் பூரணம் பெற்றவர் இவரே.

**மானிடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம்**
**ஆனிடத் தைந்து மாடும் அரன்பணிக்காக வன்றோ**
**வானிடத் தவரும் மண்மேல் வந்தான் தனையர்ச்**
**சிப்பர் ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும்**
**உணரார் அந்தோ.**

என்று இரங்குகின்றார் அருணந்தி சிவனார். இந்த ஏக்கம் தமது வாழ்வை நோக்கி எவருக்கும் ஏற்படக்கூடாது என்ற குறிக்கோளுடன் வாழ்ந்து பூரணம் பெற்றவர் இவர். இறுதி ஏழு ஆண்டுகளும் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய நிர்வாகசபைத் தலைவராகப் பணி புரிந்தார்.

**"வாழ்வெனும் மையல் விட்டு வறுமை**
**யாம் சிறுமை தப்பி தாழ்வெனுந் தன்மை**
**யோடு சைவமாஞ் சமயஞ் சாரும்**
**ஊழ்பெற லரிதே"**

என்பதைத் தன்னுள்ளத்திற் கொண்டு அரும்பணிகள் பலபுரிந்தார். இவருடைய இறுதிக் காலத்தில்துர்க்காதேவி ஆலயம் மிகச் சிறப்புற்றுத் திருப்பணிகளாலும் மேன்மையுற்று விளங்கியதை யாவருமறிவார். திருப்பணி வேலைகளில் அயராது பங்கெடுத்து நிறைவேற்றி வைப்பதில் உறுதுணையாக அமைந்தவர் இப் பெரியார் என்றால் அதில் மிகையொன்றுமில்லை. மகாஜனக் கல்லூரியிலும் நடராசப் பெருமானைப் பிரதிட்டை செய்வித்து மாணவ உள்ளங்களில் தெய்வ நம்பிக்கை ஏற்பட வழிவகுத்துக் கொடுத்தவர் அமரர் அவர்களே. ஈழத்தின் பல பாகங்களிலும் சமய மன்றங்களும் கூட்டுப் பிரார்த்தனைகளும் சிறப்புற அமைவதற்கு மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்களும் காரணர்களாவர். பெரிய புராணத்தைப் பல பெரியோர்கள் அறிந்துய்வதற்கு வழிகோலி இரண்டு வருட காலம் பெரிய புராண வகுப்பு தெல்லிப்

பழையில் நடைபெறுவதற்கு உறு துணையாக இருந்தவர்களும் பெரியார் அவர்களே. தெல்லிப்பழை இந்து சமய விருத்திச் சங்கத்தின் தலைவராகப் பல காலம் பணி புரிந்து சைவ விளக்கத்தைத் தெல்லிப்பழையில் ஏற்றி வைத்தவர் இவரே.

அமரர் அவர்கள் இறைவனைக் கும்பிடும் திறனும் தனித்துவம் வாய்ந்தது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் சிவாலய வழிபாட்டை எவ்வாறு அறிவுறுத்தினாரோ அவ்வகையினின்றும் சிறிதும் பிறழாதவராய்க் கும்பிடும் சிறப்புடையவர் இப்பெரியார். மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் ஒன்றுபட்டு வழிபாடு ஆற்றுவார். இத்தகைய சிவ நெறிச் சீலராக விளங்கிய பெரியார் அவர்களின் மறைவும் சீவன் முத்தர்களின் இடத்தை எட்டிப்பிடித்துவிட்டது.

**அந்த ணாளனுன் அடைக்கலம் புகுத**
**அவனைக் காப்பது காரணமாக**
**வந்த காலன் தன்னாருயிரதனை**
**வவ்வி னாய்க்குன்றன் வண்மைகண் டடியேன்**
**எந்தை நீயெனை நமன்தமர் நலியில்**
**இவன்மற்றென்னடி யானென விலக்கும்**
**சிந்தை யால்வந்துன் திருவடி யடைந்தேன்**
**செழும்பொழிற்றிருப் புன்கூருளானே.**

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பிரார்த்தித்து நின்றதுபோல் அமரர் அவர்களும் எல்லாம்வல்ல துர்க்கா தேவியைப் பிரார்த்தித்து நின்ற சிறப்பினால் அமைதியான மரணத்தை ஏற்றுத்தேவி சரணாரவிந்தமடைந்தார்.

**ஈதல் இசைபடவாழ்தல் அதுவல்லது**
**ஊதிய மில்லை உயிர்க்கு.**

என்பது பொய்யா மொழியன்றோ. ஆகவே அன்னாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நாமும் நிறைவாழ்வு வாழ்ந்து இன்புறுவோமாக.


## சிவபூமி கண்தான சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

### தொடர்புகளுக்கு

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**021 - 222 6550**

கண் வைத்திய நிபுணர்
**Dr. ச. குகதாசன்**
**021 - 222 3645**

உ


துர்க்காதேவி துணை

# நூற்றாண்டு நினைவுப் பிரார்த்தனை

# அமரர் தெ.து.ஜயரத்தினம் அவர்கள்

(தலைவர் – நிர்வாகசபை, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் 1970 – 1976)

(முன்னாள் அதிபர், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)



பள்ளித்தலத்தை பார்போற்ற வைத்த
பகலவன் நீர்
சிரித்துச் சிரித்து சிந்தித்து சிந்தையால்
பலரை வாழவைத்த சிற்பி நீர்
உறங்காது ஓயாது உலகுக்காக வாழ்ந்த
ஒப்புரவாளன் நீர்
துர்க்காதேவியின் நிர்வாக அரியாசனத்தை அலங்கரித்த
தூண்டாமணி விளக்கு நீர்
இமைப்பொழுதும் இனியபணி செய்த இனியவரே
இறக்கவில்லை நீர்
இவ்வையகமுள்ளவரை வணங்கும் தகுதி பெற்றீர்
வாழி நூற்றாண்டில்!

**நிர்வாக சபை**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை.**


# அண்ணலைத் தந்த அரும்புகழ்த் தந்தை



**பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை**

**1872.11.20 -- 1929.06.24**

# அமரரை ஈன்ற அருங்குண நங்கை



## திருமதி தையல்நாயகம் துரையப்பாபிள்ளை

**1889 -- 1.3.54**

PUBLIC LIBRARY
JAFFNA

## நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்



# செஞ்சொற்செல்வரின் பிரார்த்தனையுரை

**கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்**
*தலைவர்,*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,*
*தெல்லிப்பழை.*

குறிஞ்சிமலர் காலத்துக்கொருமுறை பூப்பது போல மனிதர்களிலும் சிலர் மகத்தான மனிதர்களாகப் பிறப்பதுண்டு. அதிபர் ஜயரத்தினம் ஐயா அவர்கள் மனிதருள் மாணிக்கமாகத் திகழ்ந்தவர். ஈர நெஞ்சுடைய இரக்கமுள்ள மனிதராக, ஏழை பங்காளனாக விளங்கியவர். பல்லாயிரக்கணக்கான ஏழை மாணவரை வாழ வைத்த மகாஜன சிற்பி என உலகம் போற்றுகிறது.இப் பெரியாரின் நூற்றாண்டு விழாப்பல இடங்களிலும் கொண்டாடப்படுவது பாராட்டுக்குரியது. எங்கள் தேவஸ்தானத்தின் நிர்வாகசபைத் தலைவராக இறக்கும் வரை பணியாற்றிய பெருந்தகை அன்னை சிவத்தமிழ்ச் செல்விக்கு "துர்க்காதுரந்தரி" என்ற பட்டத்தை வழங்கி அன்னையைப் பெருமைப்படுத்திய பண்பாளர் எங்கள் தேவஸ்தானத்தின் திருப்பணிகளில் ஆர்வம் காட்டிய திருத்தொண்டர். இவரது தலைமையிலேயே ஸ்ரீ துர்க்காதேவியின் திருத்தேர் திருப்பணி ஆரம்பிக்கப்பட்டதாக அறிகிறோம். எங்கள் தேவஸ்தானத்தின் பெருமைமிகு தலைவராக விளங்கிய வரலாற்று நாயகனின் நூறாவது பிறந்த நாளை நினைவு கூர்ந்து எமது தேவஸ்தானம் நூற்றாண்டு விழாவையும், சிறப்பு மலர் வெளியீட்டினையும் மேற்கொள்வது எனத் தீர்மானித்து இப்பெருமகனாரின் தூய பணிகளை எண்ணிப் போற்றி அவர்களின் பாதையில் எம் கடன் பணி செய்ய வேண்டி பெருமகனாரின் நூற்றாண்டுவிழாச் சிறக்க பிரார்த்தித்து வணங்கி அமைகிறேன்.

**ஸ்ரீ துர்க்கையின் திருநாமங்களைச் சொல்லிக் கொண்டு தனிவழி நடக்கும் ஒருவனுக்குத் துணையாக சங்கரர் தமது பினாகம் என்ற பெரிய வில்லையும் அம்புகளையும் எடுத்துக்கொண்டு அவனுக்குக் காவலாக முன்னால் நடப்பார் என்று கூறுகிறார் ஸ்ரீ இராம கிருஷ்ண பரமஹம்ஸர்.**

# மகாஜனக் கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி

**திரு.கு.வேல் சிவானந்தன் அவர்கள்**

*அதிபர்,*

*யா/ மகாஜனக் கல்லூரி,*

நவமகாஜன சிற்பி, முன்னாள் அதிபர் அமரர் தெ.து.ஜயரத்தினம் அவர்களின் நூறாவது பிறந்ததினம் 2013 ஒக்டோபர் 15இல் கொண்டாடப்படுவதை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் அறங்காவலர் சபையினரால் வெளியிடப்பட்டுவரும் 'அருள் ஒளி' சஞ்சிகை சிறப்பு மலராக வெளியிடப்படுவதை அறிந்து பெருமகிழ்வு அடைகிறேன். அத்தோடு சிறப்பு மலரில் எங்கள் அதிபர் தெ.து.ஜெயரத்தினம் அவர்களின் வாழ்வையும் பணியையும் இதயத்தில் நினைவு கூர்ந்து, வணங்கி வாழ்த்துச் செய்திகளைக் கூறுவதில் அகமகிழ்வு அடைகிறேன்.

ஆங்கிலேயர், இலங்கையை ஆட்சி செய்துகொண்டிருந்த காலத்தில் இந்து மக்களில் குறிப்பிடத்தக்க சிலர் ஆங்கிலக் கல்வியை கற்பதற்கும், உயர் கல்வியைப் பெறுவதற்கும், கிறிஸ்தவ, கத்தோலிக்க சமயத்திற்கு மதம்மாறிக் கொண்டிருந்தனர். இதனால் சைவப் பெருமக்களின் உயர் பண்பாட்டு விழுமியங்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்ற பெருநோக்கோடு, சைவப் பண்பாட்டையும் உயர் பண்புகளைப் பேணி வருவதற்கும் ஆங்கில மொழியில் உயர்கல்வியைக் கற்று, உயர் கல்வியைப் பெறுவதற்காகவும் தெ.து.ஜயரத்தினம் அவர்களின் தந்தையார் பாவலர் துரையப்பாபிள்ளை தெல்லிப்பழைக் கிராமத்தில் மகாஜனக் கல்லூரியை 1910இல் நிறுவினார்.

அத்தோடு இந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காக தனது மகன் தெ.து.ஜயரத்தினம் அவர்களை உயர் சைவப் பண்பாட்டைப் பின்பற்றும் மகனாகவும், தலைசிறந்த தலைமைத்துவப் பண்புகளுடன் உயர்தரமான ஆங்கிலப் புலமையுடன் சிறந்த ஆளுமையுள்ள தலைமகனை வளர்த்தெடுத்தார்.

பாவலர் துரையப்பாப்பிள்ளை அவர்கள் உன்னதமான சமுதாய நோக்கோடு இப்பணியை அதி சிரத்தையோடு செய்திருக்காவிடின் தெல்லிப்பழைக் கிராமம் மட்டுமல்ல, அதனைச் சூழவுள்ள அயற்கிராமங்களும் உயர் இந்துப் பண்பாட்டிலிருந்து விலகி கத்தோலிக்க, கிறிஸ்தவ பண்பாட்டுக்கு மாறியிருப்பர்.

தந்தையின் கனவை நனவாக்க தெ.து.ஜயரத்தினம் அவர்கள் 1932ம் ஆண்டு மகாஜனக் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்து, உன்னதமான ஆசிரியப் பணியைப் புரிந்தார். 1945ம் ஆண்டு தொடக்கம் 1970ம் ஆண்டு வரை மகோன்னதமான அதிபராகப் பணியாற்றினார். இக்காலமே மகாஜனக் கல்லூரியின் பொற்காலமாகும்.

தந்தையார் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களினால் ஏற்றிய ஞான ஒளி மூலம் அவரது தவப்புதல்வனான தெ.து.ஜயரத்தினம் அவர்கள் பேரொளித் தீபமாக

மிளிர்ந்தார். மிக உயர்ந்த தலைமைத்தவப் பண்புகளோடு தலைசிறந்த கல்வி நிர்வாகியாக வினைத்திறனுடன் மாணவர்களுக்கு ஒளியேற்றினார். இதனால் மகாஜனக் கல்லூரியில் கற்ற பல மாணவர்கள் ஆங்கிலப் புலமையுடன் உயர் இந்து சமயப் பண்பாட்டு, ஒழுக்க விழுமியங்களுடன் பல்கலைக்கழகத்திற்கும், இன்னும் பல நூறு மாணவர்கள், பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களிற்கும் கற்பதற்காகச் சென்றனர். இவர்கள் பலநூறு மருத்துவர்களாகவும், பொறியியலாளர்களாகவும், பேராசிரியர்களாகவும், கணக்காளர்கள், சட்டத்தரணிகள், நிர்வாக அதிகாரிகள், லிகிதர்கள், அதிபர்கள், முகாமையாளர்கள், நில அளவையார்கள் என உயர்பதவிகளைப் பெற்று மகாஜனவில் பெற்ற ஒளி மூலம் சமூகத்துக்கு ஒளி ஏற்றினார். ஆதலால் மகாஜனக் கல்லூரி நாட்டின் தலைசிறந்த கல்லூரிகளில் ஒன்றாக மிளிர்ந்தது.

கல்வித்துறையில் மாத்திரமல்ல, விளையாட்டுத்துறை, கலை இலக்கியத் துறை, தொழில்நுட்பத் துறைகளில் அகில இலங்கை ரீதியில் புகழ்பூத்த மகாஜனன்களாக மிளிர்ந்து தேசிய சர்வதேச ரீதியில் உயர்ந்த வினைத்திறமைகளுடன், உயர்ந்த செயல் வீரர்களாகத் திகழ்கின்றனர்.

இவரது கல்விப் பணியினாலும், சமுதாயப் பணியினாலும் ஆன்மீகப் பணியினாலும், தெல்லிப்பழைக் கிராமம் மாத்திரமல்ல, அயற்கிராமங்களிலும் வாழ்ந்த விவசாயிகள், தொழிலாளர்கள் கல்வி கற்ற சமூகமாக உயர்ந்தது. ஆங்கிலப் புலமையுள்ள உயர்தொழில்களைச் செய்யும் மாநகரத்து பெருங்குடி மக்களாக உயர்ந்து மகிழ்வாக வாழ்கின்றனர்.

'உனை நீ அறி' என்ற கல்லூரியின் மகுட வாக்கியத்தின் அர்த்தத்தை மாணவருக்கு உணர்த்தி அவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை வினைத்திறனாகச் செயற்படவைத்தார்.

**"வெல்லுக மகாஜன மாதா வெல்லுக மகாஜன தலைவர்"** எனக் கல்லூரிக் கீதம் பாடவைத்து கல்லூரியையும் வெற்றி பெறவைத்தார். மாணவர்களையும் வெற்றிபெற வைத்தார்.

**நல்கால் நல்காய், நல்காய்**
**நல்லறம் பொருளின்பம் நல்காய்**

என்று கல்லூரிக் கீதம் பாடவைத்து வாழ்விற்கு வழிகாட்டியாக நின்றார்.

மகாஜனக் கல்லூரியில் வீற்றிருக்கும் சிவகாமி சமேத ஆனந்தநடராஜப் பெருமானுக்கு கோவில் அமைத்து மாணவர்களுக்கு இந்து சமய பழக்கவழக்கங்களை வளர்த்தெடுத்தார். அத்தோடு துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் தலைவராக வும் பணிபுரிந்து சைவநெறியை வளர்த்ததோடு சைவமக்களுக்கு இறைபணி ஆற்றினார்.

பெருமகனார் தெ.து.ஜயரத்தினம் அவர்கள் வாழ்வும் பணியும் மகாஜனன்களின் இதயங்களில் தெய்வமாகப் போற்றி நினைவுகூர்ந்து வணங்கி வருகின்றோம்.

அவரிடம் கற்ற மாணவன் என்ற வகையிலும், துர்க்கை அம்மனின் அடியவன் என்ற வகையிலும் வாழ்த்துச் செய்தியை தெரிவிப்பதை பெரும் பேறாகக் கருதுகிறேன்.

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகச் செயற்பாடுகளில் அமரர் தெ.து.ஜயரத்தினம் அவர்களின் பங்கும் பணியும்

இற்றைக்கு முந்நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த அடியார்களின் அல்லல் தீர்க்கும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் அறங்காவலர் குழு, திருப்பணிச் சபை, உபயகாரர் எல்லோரினதும் ஒரு மித்த பெருமுயற்சியினால் 1965ம் ஆண்டு ஆவணித் திங்களில் மகாகும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

மகாகும்பாபிஷேகத்தை அடுத்து 1966ம் ஆண்டில் அறங்காவலர் குழு, தர்மகர்த்தா சபையாகவும், அதன் உப சபையாக நிர்வாக சபையும் இயங்கத் தொடங்கின. ஆலய பரிபாலனம், நிர்வாக சபையிடம் கையளிக்கப்பட்டதுடன் ஆலய வளர்ச்சியில், வரலாற்றில் புதியதொரு அத்தியாயம் ஆரம்பமாகிற்று எனலாம்.

நிர்வாக சபையின் முதல் தலைவராக அமரர் சே.தியாகராசா அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். இவர் 1970ம் ஆண்டு வரை சேவையாற்றினார். அவர் தலை வராகச் சேவையாற்றிய காலத்தில் ஆல யத்திருப்பணி வேலையுடன் ஆலயத்தின் புனிதம் பேணப்படவும் நேரக்கிரமப்படி நித்திய நைமித்தியங்கள் நடைபெறவும் வழிபட வரும் அடியார்கள் அமைதியாக வும் ஒழுங்காகவும் இருந்து வழிபடவும் நிர்வக ஒழுங்குகளை மேற்கொண்டார். 1970ம் ஆண்டு அவர் தலைமைப் பதவி யிலிருந்து ஓய்வுபெற அமரர் தெ.து.ஜய ரத்தினம் அவர்கள் தலைவராக நியமிக் கப்பட்டார். 1966ம் ஆண்டு முதல் நிர்வாக சபை உறுப்பினராகப் பணியாற்றிய அவர் 1968ம் ஆண்டு ஸ்ரீ துர்க்காதேவி ஆலய மகோற்சவம் ஆரம்பமாவதற்குத் துணை யாக புதிய கொடித்தம்பம் அமைக்க அன்பர்களிடம் நிதி சேகரிக்க உதவி புரிந்தார். மேலும் மகோற்சவம் நடை பெறும் காலத்திற்குத் தேவையான எழுந் தருளி விநாயகர் விக்கிரகத்தையும் தமது உபயமாக அன்பளிப்புச் செய்துள்ளார்.

1968ம் ஆண்டு மகோற்சவத்துடன் ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. இவர் தலைவராக இருந்தகாலத்தில் ஆலயம் குடாநாட்டில் தனித்தவமான ஆலயமாகச் சிறப்புப் பெற்றது. மிகப் பெருந்தொகையாக வரும் பக்தர்களின் வழிபாடு, நேர்த்திகளை நிறைவேற்ற வேண்டிய ஒழுங்குகளை மேற்கொண டார். 1971ம் ஆண்டு உரியவர்களிட மிருந்து நிலத்தைப் பெற்று பெருந்தெரு வில் இருந்து ஆலயத்திற்கு நேர்ப்பாதை திறந்து வைக்கப்பட்டது. மேலும் இவர் தலைவராக இருந்த காலத்தில் இவருக்கு முன்பு இருந்த தலைமைத்துவம் ஆரம் பித்து வைத்த நேரக் கட்டுப்பாடு, புனிதம், ஒழுங்கு என்பவற்றை நடைமுறைப்படுத்து வதில் கண்ணும் கருத்துமாகச் செயற் பட்டார். இதனால் இவர் காலத்தில் ஆலயத்தில் கண்ணியமும் கட்டுப்பாடும் ஒழுங்கும் நிலவின என்பர்.

1972ம் ஆண்டில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் உபயமாக "திருமுறைமடம்" கட்டிமுடிக்கப்பெற்று திறந்து வைக்கப்பட்டது. மகோற்சவ காலங்களிலும், விசேட காலங்களிலும் சொற்பொழிவுகள், இசை நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம். அந்த நிகழ்ச்சி களுக்கு எல்லாம் தலைமை தாங்கி நேரக்கட்டுப்பாட்டுடன் நடாத்தி முடிப் பார்கள். இவர் தலைமையில் புகழ்பெற்ற இசைக் கலைஞர் கே.பி.சுந்தராம்பாளின் இசைக்கச்சேரி, சாயி மாதா பிருந்தாதேவி அவர்களின் சொற்பொழிவும், கி.வா.ஜகந் நாதன் அவர்களின் சொற்பொழிவும், தர்மபுரம் சுவாமிநாதன் அவர்களின் நிகழ்ச்சியும் சிறப்பாக நடந்தேறியுள்ளன. இவ்வாறு அம்பாள் அடியார்கள் அம்பாளின் தரிசனத்துடன் நம் நாட்டு அறிஞர்களின் வெளிநாட்டு அறிஞர்களின் சொற்பொழிவு களைக் கேட்டு நல்ல கேள்வி அறிவு பெறவும் வழிப்படுத்தியுள்ளார்.

ஆலய பராமரிப்புக்கும் திருப்பணிக்கும் நிதி தேவைப்பட்டது. இதற்குத் தமது திட்டத்தை 1968ம் ஆண்டில் மாத நிர்வாகசபைக் கூட்டத்தில் விபரித்து அங்கீகாரத்தைப் பெற்று பற்றுச்சீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. ஆலயத்தில் நடைபெறும் அர்ச்சனைகள் அபிடேகங்கள், நேர்த்திகள் யாவும் பற்றுச்சீட்டுகள் மூலம் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டன. ஆலயத்தின் முன் அலுவலகம் அமைக்கப் பெற்று சைவப் பண்பும் சேவை மனப் பான்மை உள்ள பணியாளர்கள் அமர்த்தப் பட்டனர். இவ்வாறு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தை சமய ஸ்தாபனமாக ஒழுங்கான முறையில் நிதி நிர்வாகத்தை மேற்கொள்ள வழிவகுத்தார்.

அமரர் தெ.து.ஜயரத்தினம் அவர்கள் மகாஜனக் கல்லூரியில் இருந்து பல அதிபர்களை உருவாக்கியவர். மாணவ தலைவர்களைப் பிற்காலத்தில் பெரும் பொறுப்புக்களைச் செய்வதற்கு தகுதி ஆக்கியவர். தமது நிர்வாக சபையில் தனாதிகாரியாகப் பணியாற்றிய செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் திறமைகளை இனங்கண்டு சமயச் சொற் பொழிவு செய்யும் பண்டிதை உதவி ஆசிரியராக இருந்தவரை நிர்வாகத் திறமை யுள்ள தலைவர் ஆக்குவதற்கு ஊக்கு விப்புக்களை எல்லாம் செய்தார். 1970ம் ஆண்டில் மலேசியா சென்று சொற்பொழிவு ஆற்றி திரும்பி வரும்போது பலாலி விமான நிலையத்தில் பெரும் வரவேற்பிற்கு ஏற்பாடு செய்தார். நிர்வாக சபையினர் மற்றும் தொண்டர்களுடன் சென்று தாமே முன்நின்று வரவேற்பளித்தனர். 25 ஆண்டுகள் சொற்பொழிவு மூலம் சமயத் தொண்டுகள் செய்துவந்ததைப் பாராட்டி 1974.05.04 பெரு விழா எடுத்து அன்னைக்குப் பொன்னாடை போர்த்து "துர்க்கா துரந்தரி" என்னும் பட்டமும் சூட்டி கௌரவித்தார். பின்னர் 1975.05.07இல் ஆலய முன்றலில் அன்னையின் பொன்விழாக் கொண் டாட்டம் சிறப்பாக நடைபெற முன்னின்று உழைத்தார். இவ்வாறு இவர் தலைவராக இருந்த காலத்தில் ஆலய முன்றலில் அமரர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை மக்கள் முன்னிலையில் பாராட்டி கௌர வித்து மேன்மைப்படுத்தியுள்ளார்.

நிர்வாக சபை அமைப்பு விதிகள் அங்கீகரிக்கப்பட்டு நிர்வாகசபை ஒழுங்காக இயங்க ஆவன செய்யப்பட்டன. நிர்வாக சபை ஆலய பூசகர்களாகிய அந்தணப் பெருமக்கள், உபயகாரர்கள் வழிபடும்

பக்தர்கள், அலுவலக ஊழியர்கள், ஆலய பணியாளர்கள் எல்லோருடைய அன்பையும் மதிப்பையம் பெற்றவராக விளங்கி ஆலய வளர்ச்சிக்குத் திட்டங்களைத் தீட்டினார். அவர் மனதில் இருந்த இரு திட்டங்கள் சித்திரத் தேர் கட்டுதலும் கோபுரம் கட்டுதலும் ஆகும்.

தேர்த் திருப்பணிக்கு நிதி சேகரிக்கும் முகமாக 1973ம் ஆண்டு நிர்வாகசபைக் கூட்டத்தில் தேர் உற்சவ காலங்களில் அடியார்கள் வழங்கும் அர்ச்சனைப் பணமும் உண்டியல் பணமும் தேர் திருப்பணிக்கு ஒதுக்கப்படவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தேர் செய்வதற்கு முன்னர் பல கோவில்களிலும் உள்ள தேர் அமைப்புகளைப் பார்த்து எவ்விதமான தேர் செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. 1976ம் ஆண்டு மாசி மாதம் தேர்த்திருப்பணியை நிறைவேற்றும் ஒப்பந்தம் கலாகேசரி ஆ.தம்பித்துரையிடம் ஒப்படைக்கப்பட்டது.

**"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்"**

என்ற குறளுக்கு இணங்க எல்லாச் செயலுக்கும் உரிய ஆட்களைத் தெரிவு செய்து அவர்களிடம் ஒப்படைத்து நிறைவேற்றும் திறன், அமரர் தெ.து.ஜயரத்தினம் அவர்களுக்குக் கை வந்த கலை. எல்லோருடைய ஒத்துழைப்பையும் பெற்று கருமம் ஆற்றும் செயல் திறனும் அவரிடம் அமைந்திருந்தது.

சைவம் செழித்தோங்கவேண்டும் எனின் அதற்கு ஓர் அமைப்பு கிராமம் தோறும் அமைவது இன்றியமையாததாகும் என்ற அரசாங்கத்தின் கொள்கைக்கமைய தெல்லிப்பழை வாழ் சைவ மக்கள் 1955ம் ஆண்டு தெல்லிப்பழை இந்துசமய விருத்திச் சங்கத்தை அமைத்தனர். இதற்குப் பொருத்தமான தலைவராக மாண்புமிகு தெ.து.ஜயரத்தினம் அவர்களையே தேர்ந்தெடுத்தனர். அவர் இச்சங்கத்தின் வாழ்நாள் தலைவர் போல் 1976இல் அமரத்துவம் அடையும்வரை சிறப்பாகப் பணியாற்றினார்.

இந்து சமய அபிவிருத்தி, செழுமை, சிறப்பு,முக்கியத்துவம் என்பவற்றைப் பேணுவதோடு பாடசாலைகளோடு தெல்லிப்பழை கோயிற்பற்றில் உள்ள சமய மன்றங்களுக்கிடையே பண்ணிசை, சொற்பொழிவு, புராணபடனம், கதாப்பிரசங்கம் போன்ற போட்டிகளை நடாத்திப் பரிசில்களை வழங்கி ஊக்குவித்தார்.

அவர்கள் 1966ம் ஆண்டு தொடக்கம் 1976ம் ஆண்டு ஒக்ரோபர் 29ம் திகதி வரை 11 ஆண்டுகள் நிர்வாக சபை உறுப்பினராக தேவியின் ஒன்பது மகோற்சவங்களைத் தரிசித்து மகிழ்ந்த பெருமகனார் ஆவார்.

அவர் ஆற்றிய சேவை என்றும் நினைவுகூரத்தக்கன.

*"தோன்றிற் புகழொடு தோன்றுக"*

**ச.விநாயகரத்தினம்**
*ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகரும்*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான*
*நிர்வாசபை உறுப்பினரும்*

# உன்னும் உடல் நீத்தாலும்....

**திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்கள்**
*ஓய்வுநிலை அதிபர்,*
*மகாஜனக்கல்லூரி.*
*அதிபர்,*
*துர்க்காபுரம்மகளிர் இல்லம்,*
*தெல்லிப்பழை.*

நவ மகாஜன சிற்பி அமரர் தெ.து.ஜய ரத்தினம் அவர்களின் நூற்றாண்டு பிறந்த தினம் 2013ம் அண்டு ஒக்டோபர் 15ஆம் திகதி ஆகும். அவருடைய ஆத்மீக பலத்தால் உருவான உலகெங்கிலுமுள்ள கல்விமான்கள் நன்றியுணர்வுடன் இந் நாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கி றார்கள். அவரால் கட்டியெழுப்பப்பட்ட, வெள்ளிவிழாக் கண்ட அதிபராகக் கடமை யாற்றிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி யினால் இவ்வாண்டு ஜயரத்தினம் நூற் றாண்டு பிறந்ததின ஆண்டாக பிரகடனப் படுத்தப்பட்டு சமூகத்தை இணைத்து நினைவு கூர்ந்து விழாக்கள் எடுக்கப்பட்டு வருகின்றது.

அமரர் திரு.தெ.து.ஜயரத்தினம் அவர்கள் தந்தை பாவலர் துரையப்பாபிள்ளை காட்டிய வழியில் தமக்கென வாழாது பிறர்க்கென தமதுவாழ்வை அர்ப்பணித்து நிறைந்த வாழ்வு கண்டவர். தலைசிறந்த கல்விமானாக, அர்ப்பணிப்புள்ள சமூகத் தொண்டனாக, சமய ஊழியனாக எல்லா வற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல ஒரு மனிதாபிமானியாக சமூகத்தினரால் நோக்கப் பட்டார்.

அப்பெரியாரின் சமயத் தொண்டுக்கு அடையாளச் சின்னமாக இன்று தெல்லிப் பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் வான ளாவ உயர்ந்து அருள்பாலித்துக் கொண்டி ருக்கின்ற நிலை மட்டுமல்ல, உலகெங்கிலு மிருந்து பக்தர்கள் வருகை தந்து அன்னையை வணங்கி அம்பிகையின் அருட்கடாட்சம் பெறுகின்ற ஒரு சைவ பூமியாகவும் தெல்லிப்பழை திகழ்கின்றது என்பது மிகையல்ல.

ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான நிர் வாக சபையில் 1966ம் ஆண்டு உறுப்பின ராக இணைந்து 1970ம் ஆண்டு முதல் 29-10-1976ம் ஆண்டு அம்பிகை பதம் அடையும்வரை ஆளுமைமிக்க தலை வராக இருந்து செயற்பட்டவர். ஆலயத்தின் பெருமையையும் ஒழுங்கையும் நிலை நாட்டியவர். ஆன்மீக வழிகாட்டியும் சமூகத் தொண்டருமான சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களைத் தன்னுடைய நிர்வாக சபையில் பொருளாளராக இணைத்துக் கொண்டவர். இதன் மூலம் பெண்களுக்கு பொறுப்புள்ள சமுதாய அந்தஸ்தை ஏற்படுத்தி அவர்களின் சேவையை உலகறியச்செய்ததில் பெருமை கொண்டவர். பெண்மையைப் போற்றுகின்ற அந்த உன்னதமான உணர்வைத் தன்னுடைய கல்விப்பணி யில் மட்டுமல்ல, சமயப்பணியிலும்,

சமூகப்பணியிலும் வெளிப்படுத்தி வாழ்ந்து காட்டியவர்.

அமரர் தெ.து.ஜயரத்தினம் அவர்கள் இவ்வுலகை விட்டு மறைந்தபோது புலவர் நா.சிவபாதசுந்தரனார் அவர்களினால் இயற்றப்பட்ட "உன்னும் உடல் நீத்தபோது" என்ற பாடலில் சிலவரிகளை இங்கு பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

**"தெய்வத் திருக்கோயில் தேர்ந்த பல பூசை**
**எய்யவே ஏத்தி வணங்குவாய் – மெய்யாகச்**
**சைவநலம் பேணல் சார்ந்த தமிழ்கற்றல்**
**மெய்பெறவே ஆற்றினாய் மேல்.**

**அழகும் புனிதமும் ஆன்ற ஒழுங்கும்**
**பழகும் பொழுதிலே பண்பாய் – ஒழுகிடவே**
**வேண்டுமென நின்றாய், விளைந்த பணிகளிலே**
**காண்டு மெனநின்றாய் கனிந்து.**

– நன்றி மகாஜனன் 71–76

நிறைவாக நூற்றாண்டு பிறந்ததினம் காணும் நவ மகாஜன சிற்பி அமரர் தெ.து.ஜயரத்தினம் செதுக்கிய கல்விக் கூடத்தில் நூற்றாண்டு விழாகால அதிபராக அமரர் அவர்கள் 25 வருடங்களுக்கு மேலாக அதிபராக அமர்ந்து கோலோச்சிய ஆசனத்தில் நானும் ஒரு சில வருடங்கள் அமர்ந்து அவருடைய ஆசியுடன் கல்விப் பணி செய்தேன் என்ற பெருமையுடன் எல்லாம்வல்ல துர்க்கை அம்பாள் பாதம் பணிந்து அன்னாருக்கு நூற்றாண்டு பிறந்த தின வாழ்த்துக்களைக் கூறுவதில் எனது நன்றியை வெளிப்படுத்தி அமைகின்றேன்.

**பாரதியார் கண்ணனைத் தனது ஆண்டான் (முதலாளி) என்று கருதிப் பாடும் பாடல் மிகவும் சுவையானது. "என் ஆண்டானே! எனக்கு நீ இரண்டு நாலு முழத்துண்டு தரவேண்டும். அது நான் உடுத்திக் கொள்வதற்கு. அதைவிட நல்லவேட்டிகள் சிலவும் நீ எனக்குப் புதிதாகத் தரவேண்டும். அது ஏன் தெரியுமா? நான் மற்றவர்களுக்குத் தானம் கொடுப்பதற்கு" என யாசித்துப் பாடிய பாடல்கள் நம் சிந்தைக்கு விருந்து ஆகும்.**

# ஜயரத்தின தீபத்திலிருந்து...

**திரு. செ. கதிரேசர்பிள்ளை அவர்கள்**

*ஆசிரியர்,*

*மகாஜனக் கல்லூரி.*

'நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே' என்பதால் இந்நிலவுலகிற் சீர் பெருக்கி வாழ்ந்து அமரராகிய திரு.தெ.து. ஜயரத்தினம் நல்லோரின் புகழ்வாழ்வுப் பெருநிலை ஈண்டு விரிக்கப்பெறுகிறது.

ஈழத் திருநாட்டிற் பெருநிலை பெற்றோங்கும் மகாஜனக்கல்லூரியை 1910ஆம் ஆண்டிலே 'மகாஜன உயர் கலைக் கழகம்' என்று பெயரிட்டுத் தெல்லிப்பழை நகரிலே நிறுவியவரும், அந்நகரை அணிசெய்யும் மற்றைத் தாபனங்களாகிய தபால் நிலையம், புகைவண்டி நிலையம், கூட்டுறவுக் கழகம் ஆதியன தோன்றுவதற்கு முன்னின்றுழைத்த முதன்மைப் பிரமுகரும், மாணவர் மனத்திலே சைவத்தெளிவும், செந்தமிழ்ச் செழுமையும், ஆங்கிலத் தேர்ச்சியும் பெருக்கி வழிப்படுத்திய தலைமை ஆசிரியருமாகிய பாவலர் தெ.அ.துரையப்பா பிள்ளைக்கும், அவர் தருமபத்தினியாராகிய தையல்நாயகி அம்மையாருக்கும் தலைமகனாக, திரு.ஜயரத்தினம் அவர்கள் 1913ஆம் அண்டு அக்டோபர் மாதம் 15ஆம் நாள் அவனியிலே உதித்தார். அவர், தமக்கையாராகிய இரத்தினம்மா நங்கை யுடனும், தம்பியாராகிய தருமராஜா நம்பியுடனும் அன்புற்றமர்ந்து தாய் தந்தையர் அரவணைப்பில் இன்புடன் வளர்ந்தார்.

தெல்லிப்பழைச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் திரு.ஜயரத்தினம் அவர்கள் வித்தியாரம்பம் பெற்றார். ஆங்குத் திறமையாகக் கற்றபின் 1919ம் ஆண்டிலே தந்தையாரது மகாஜன உயர்கலைக் கழகத்தில் ஆங்கிலம் கற்கப் புகுந்தார்.அங்ஙனம் கற்றவர் எட்டாம் வகுப்புப்பரீட்சையில் முதன்மைத் தேர்ச்சி பெற்றுச் சித்தியடைந்தார். அந்நாளில் ஒரு பெருந் துன்பச் சுழல் அவர் வாழ்விலே அமைந்தது. பெரும் புகழாளராகிய தந்தையார் துரையப்பாபிள்ளை 1929ஆம் ஆண்டில் அமரராகிய நிலையே அது. இந்நிலை ஜயரத்தினம் அவர்களைப் பெரிதும் தாக்கியதேனும், அவர் தளராது, யாழ். இந்துக் கல்லூரியிற் சேர்ந்து, 'இலண்டன் மற்றிக்குலேஷன்' (London Matriculation) பரீட்சையிலே தேறி, 'இன்ரர் ஆர்ட்ஸ்' கற்கும் பொருட்டு யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சென்றார். ஆங்கே ஒன்றரை ஆண்டுகள் கற்றுக் கொண்டிருந்தார். அவ்வேளையில் ஆசிரியராகச் சேர்வதால் நலன் கிடைக்குமென அறிந்தமையால் 1932ஆம் ஆண்டிலே தமது கல்விப் பயிற்சியை நிறுத்திவிட்டு, மகாஜன உயர்கலைக் கழகத்தில் ஒர் உதவி ஆசிரியராகப் பதவி ஏற்றார். அதன்பின் தமது கல்வியைத் தொடர்ந்து 'இன்டர்' பரீட்சையிலும் சித்தியடைந்தார்.

ஆசிரியர்கள் தமது கல்வித் தகுதியை மேன் மேலும் பெருக்கிக் கொள்ளல்

வேண்டுமென்ற கொள்கையுடையராகிய ஐயரத்தினம் அவர்கள் ஆங்கில ஆசிரியப் பயிற்சித் தராதரம் பெறவிழைந்து விண்ணப்பித்தார். அந்நாளில் ஆங்கிலப் பயிற்சிக் கலாசாலை கொழும்பு நகரில் அமைந்திருந்தது. அங்கு பயிற்சிபெறச் செல்வதற்கு நிறைந்த கல்வித் தேர்ச்சி வேண்டியிருந்தது. எங்கள் ஐயரத்தினம் அவர்கள் அக்கலாசாலைப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். இத்தெரிவில் சித்திபெற்றோர் நாற்பதின்மருள் திரு. ஐயரத்தினம் ஒருவரே யாழ்ப்பாணத்து மாணவராக அமைந்தமை அவரது திறமையை அன்று யாவரும் தெளிய ஏதுவாயிற்று.

அந்நாளில் ஆசிரிய கழக அதிபராகி விளங்கிய திரு.S.F.de சில்வா அவர்களின் அன்புக்கும் பெருமதிப்புக்கும் பாத்திரராகி இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்று, பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறி வந்து, 'மகாஜனா'விலே தமது ஆசிரியப் பணியைத் தொடர்ந்தார். அப்பொழுது திரு.கா. சின்னப்பா அவர்கள் தலைமை ஆசிரியராக இருந்தார். அவர் திரு.ஐயரத்தினம் அவர்களின் பணியை மேலும் விரிவுறச் செய்யும் பேருதவியாளராய் விளங்கினார். அதனால் பயிற்சிக் கல்லூரியிற் பெற்ற புதுமைகளையெல்லாம் தமது கற்பித்தலிற் புகுத்திக் கழகத்தை முன்னேற்றப் பாதையில் நடத்திச் சென்றார் திரு.ஐயரத்தினம் அவர்கள்.

பயிற்சி பெற்று வந்தும் திரு. ஐயரத்தினம் அவர்களின் கற்குந் தாகம் குறைய வில்லை. கலைமாணிப் பட்டம் பெறவேண்டு மென்ற துடிப்புடன் அப்பரீட்சை குறித்துக் கற்கத் தொடங்கினார். இந் நாளிலே இவர் தமது அன்னையாரின் பணிப்புக்கிசைந்து 1942இல் திருமணமும் புரிந்து கொண்டார். உரிமை மைத்துனியாகிய நிறைகுண மங்கை இராணிரத்தினம் இவரது வாழ்க்கைத் துணைவியாயினார். சில நாட்களிலே திரு.ஐயரத்தினம் அவர்கள் B.A. பரீட்சையிற் சித்தியெய்திய பேறும் பெற்றார். 'இல்லதென் இல்லவள் மாண்பானால்' என்ற வள்ளுவனார் வாக்கினைத் திருமதி ஐயரத்தினம் அவர்கள் மெய்ப்பித்தார் என்றே கூறும் அளவுக்கு அவரது மங்கல மனைமாட்சி சிறந்தோங்குவதாயிற்று. தம் கணவனாரின் பெரும் புகழ் மிகுதற்கு இந்த அம்மையார் பெருந்துணையாக விளங்கினார்.

1945ஆம் ஆண்டிலே தலைமையாசிரியர் திரு.கா.சின்னப்பா அவர்கள் அமரராயினார். அதனாலே மகாஜனக் கழகத் தலைமைப் பீடம் வெறுமையாயிற்று. ஆங்குக் கற்பித்த ஆசிரியப் பெருந்தகையாளரும், ஊர்ப் பெருமக்களும் வேண்டிக்கொள்ள, திரு.ஐயரத்தினம் அவர்கள் அத்தலைமைப் பீடத்தை ஏற்றுத் தம் பணியை விரிவாக்கத் தொடங்கினார்.

திரு.ஐயரத்தினம் அவர்கள் தலைமை ஏற்ற சில நாட்களிலே 'மகாஜன உயர்கலைக் கழகம்', மகாஜனக் கல்லூரி' என்று பெயர் மாற்றம் பெற்றது. ஆண்டு தோறும் புதுமைகள் பல புகுத்தப்பட்டன. கட்டிடங்கள் பல எழுந்தன. பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புக்கள் ஆரம்பமாயின. ஆய்வு கூடங்கள், ஆட்டவெளிகள், விடுதிச்சாலை, தொழிற்கூடம், புத்தகசாலை, தேநீர்ச்சாலை முதலாம் பல்வகை அங்கங்கள் அமைக்கப் பட்டன. நடராஜர் நடம்புரியும் திருக் கோயிலும் அதிபர் எண்ணப்படியே அமைந்து சிறந்தது. பயிலும் மாணவர் பன்மடங்கு

தொகையினர் ஆயினர். நிறைந்த கல்வி மான்களாகிய ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டனர். இவ்வாற்றால் தரத்தில் மிக உயர்ந்தது மகாஜனா. அதிபர் அவர்கள் உயர் தனித்தர அதிபராகப் பதவி ஏற்றம் பெற்றார். கல்லூரியும் 1961ஆம் ஆண்டில் உயர் தனித்தரத்தைப் பெற்று உயர்ந்தது. இவ்வளவும் அதிபர் ஜயரத்தினம் அவர்களின் சலியா உழைப்பினாலும், சிந்தனையாற்ற லாலும் செயற்றிறத்தாலும் நிகழ்ந்தனவாம்.

தரம் உயர்ந்த அதிபர் அவர்களைத் தேடித் தகுதியான பெரும் பதவிகள் வந்தன. முன்னாள் கல்வி அதிபராக விளங்கிய திரு.H.S. பெரேரா அவர்கள் அதிபரைக் கல்வி நிருவாகப் பகுதியில் அமர்த்திவிட விழைந்து அழைத்தார். அதனை அதிபர வர்கள் ஏற்கமறுத்து, தந்தை தொடக்கித் தந்த பள்ளியின் உயர்வையே நாடி உழைத்தார். எனினும் மற்றைய பதவிகள் தேடிவந்தபோது, அவை தம் கல்லூரி வளர்ச்சிக்குத் துணையாம் எனத் தெளிந்து ஏற்றுக்கொண்டார். இதனால் 1946இல் வடமாகாண ஆசிரிய சங்கச் செயலாள ராகவும், 1949இல் அதன் தலைவராகவும் அமர்ந்து பணியாற்றினார். 1956ஆம் ஆண்டில் வடமாகாண அதிபர்கள் சங்கச் செயலாளராகவும், 1967, 68ஆம் ஆண்டு களில் அதன் தலைவராகவும் அமர்ந்து சிறந்தார். 1962, 63ஆம் ஆண்டுகளிலே யாழ்ப்பாணப் பாடசாலைகளின் விளை யாட்டுச் சங்கத் தலைவராகத் திகழ்ந்தார். 1964இல் அகில இலங்கைத் தலைமை ஆசிரியர் சங்கச் செயலாளராகத் தெரிவு செய்யப்பெற்றுப் பணிபுரிந்தார்.

இவ்வாறு கலைத்துறைப் பணிகளே யன்றி, சமயத்துறைகளிலும் இவரது பணி வேண்டப்பட்டது. மாவிட்டபுரத் திருப்பணிச் சபையின் பொருளாளராக இவர் தெரிவு செய்யப்பெற்று, திருப்பணி நிறைவுறத் துணைநின்றார். மாவிட்டபுரம், திருக்கே தீச்சரம் ஆகிய தலங்களில் பாடசாலை மூலம் விழாக்கள் நடத்துவித்தார். தெல்லிப்பழைத் துர்க்கை அம்பாள் ஆலயத் திருப்பணிச்சபை, தருமகர்த்தாக்கள் சபை ஆகியவற்றின் தலைமையும் இவர்க்கே அளிக்கப்பட்டன. தெல்லிப்பழைக் கூட்டுறவு வைத்தியசாலை யின் தலைவராக அமர்ந்ததோடு, மற்றும் வேண்டிய பொதுநலத் துறைகளிலும் அங்கம் வகித்தார். இவற்றால் பொதுமக்களி டையே புகழ்பெற்ற பிரமுகராத் திகழ்ந்த திரு.ஜயரத்தினம் அதிபர் அவர்களை அரசாங்கமும் மதித்துப் போற்றியது. 1967ஆம் ஆண்டிலே, சமாதான நீதிபதிப் பட்டம் கொடுத்துக் கௌரவித்தது.

திரு.ஜயரத்தினம் அதிபர் அவர்கள் தமக்கெனப் பெற்ற தனிப்புகழேயன்றிக் கல்லூரி நிருவாகத்தினாற் பெற்ற புகழ்ச்சியே ஏற்றமுடைத்தாகும். 1963ஆம் ஆண்டிலே, 38 மாணவர் பல்கலைக் கழகம் புகுந்த ஒரு சிறப்புச் சாதனையும், எட்டு ஆண்டுகள் தொடர்ச்சியாக உதை பந்தாட்ட வெற்றிக்கிண்ணம் பெறவைத்த சாதனையும், ஐந்தாண்டுகள் தொடர்ந்து நாடகப்போட்டியில் வெற்றியீட்டிய சாத னையும் ஆகிய இவையெல்லாம் அதிபர வர்களது அரிய நிருவாகத் திறமைக்குச் சான்றுபகர்வன. இதன் மேலும் இவற்றை விரிக்கிற் பெருகுமென அஞ்சித் தவிர்க் கின்றோம்.

திரு.ஜயரத்தினம் அவர்களது இல்லறம் செம்மையுற மலர்ச்சி பெற்றது. 'தற் கொண்டான் வளத் தக்காள் வாழ்க்கைத்

துணை'யாக அமைந்த சிறப்பினால் அது புகழ்பெற்றது. 1945ஆம் ஆண்டிலே மங்கலவாழ்வின் நன்கலமாகத் தோன்றிய பெண்மகவுக்கு ஜெயபவானி எனப் பெயரிட்டுப் போற்றினர். அதன்மேல், 1948இல் ஜெயகுமாரனும், 1950இல் ஜெயகாந்தனும் ஆகிய ஆண்மக்கள் தோன்றினர். 1953இல் ஜெயவாணி என்ற புத்திரியும் பிறந்தாள். நால்வர் மக்களுடன் அதிபர் அவர்கள் இல்லறம் நன்கு மலர்ந்தது. இம் மக்களைப் பேரன்புடன் பேணி வேண்டிய வேண்டியாங்குதவி நன்மக்க ளாக்கி நின்ற அதிபர் அவர்கள் 1966ஆம் ஆண்டில் பொறியியல் நிபுணன் திரு.விக்கி னேஸ்வரனைத் தம் மூத்த புதல்வி ஜெய பவானிக்குத் தகுந்த மணவாளனாகக் கண்டு மணம்புரிந்து வைத்தார். அவ்வாறே 1974இல் தமது மூத்தபுதல்வன் ஜெயகுமா ரனுக்கு நற்குண மங்கை யோகினியைத் தகுந்த வாழ்க்கைத் துணையாகத் தேர்ந்து வைத்தார். இளைய மகள் ஜெயவாணிக்கு 1975இல் வைத்தியகலாநிதி மகேஸ்வரனைத் தேர்ந்தெடுத்து மணம் முடித்துவைத்தார். மூத்தபுதல்வியின் புதல்வியாகத் தோன்றிய செல்வி சௌமியா ஆகும் பேரக்குழந்தை யைச் சீராட்டிப் போற்றும் பெரும் பேறும் பெற்றார்.

'இன்பமும் துன்பமும் சுழல் சக்கரம்' என்றாங்கு, சில துன்ப நிலைகளும் அதிபர் அவர்களது வாழ்வில் அமைந்தன. தந்தை யார் நீங்கியபின் நைந்த குடும்பத்தை நன்னிலையாக்கியமைத்த நற்பெருமாட்டி யாகிய அன்னையாரை 1954ஆம் ஆண்டில் இழந்தமையும், அன்னைக்கு அன்னையாகி அமைந்த தமக்கையாரை 1970ஆம் ஆண்டில் இழந்தமையும் அதிபர் அவர்களை மிகுதியும் கலக்கிய துன்ப நிகழ்ச்சிகளாகும்.

இவ்வாறு வாழ்க்கைச் சுழலில் இன்பமும் துன்பமும் அமைந்தாலும் தமது கருமங் களிற் கண்ணாய் இருந்த அதிபர் அவர்கள் கல்லூரி விருத்தியின் பொருட்டுக் கடின மாக உழைத்தார். 1957ஆம் ஆண்டு மலேஷியாவுக்குச் சென்று பொருள் சேக ரித்தும், பொருட் காட்சியும், களியாட்டு விழாக்களும் இருமுறை நடத்துவித்து நிதி திரட்டியும், தமது பொருளை அர்ப்பணித்தும் கல்லூரியை விருத்தி செய்தார். சிறந்த வொரு விஞ்ஞான ஆய்வுகூடம் அமைக்கும் பணியில் முயன்று அதற்கு ஆதாரமான பொருளின் அரைப் பங்கை, சேகரித்துக் கொண்டு அடிக்கல் நாட்டுவிழாவும் நடத்தினார். இவ்வேளை யிலேதான் அதிபர் அவர்கள் இளைப்பாற வேண்டிய சூழ்நிலை வந்தெய்திற்று. 55 வயதோடு அரசாங்க சேவையிலிருப் போர் இளைப் பாறுதல் வேண்டுமென்ற சட்டம் நடை முறைக்கு வந்தபோது 58ஆம் வயதைப் பெற்றிருந்த அதிபர் அவர்கள் இளைப்பாற வேண்டியவரே ஆயினார். 1957இல் ஆசிரியராக அமர்ந்து 25 ஆண்டுகள் சேவை ஆற்றியமைக்காக நிகழ்த்திய வெள்ளிவிழாவை அநுபவித்த அதிபரவர்களுக்கு 25 ஆண்டு அதிபர்ப் பணிக்குரிய வெள்ளி விழாவை 1970இல் நடத்திக் கௌரவிக்கக் கல்லூரி சித்த மாகிக் கொண்டிருந்த வேளையில் அவர் இளைப்பாறவேண்டிய நிலை நேர்ந்தது. அதனால் அதிபர் அவர்களுக்குப் பிரிவுப சார விழா நடத்திய கல்லூரியினர் அவரை நீடுவாழ வாழ்த்தி நின்றனர்.

மனையகத்தே இளைப்பாறி வாழ்ந்த அதிபர் திரு.ஜயரத்தினம் அவர்கள் தமது ஆத்மார்த்தமான வாழ்வைப் பெருக்கும் நிலையிலே துர்க்கை அம்பாள் ஆலயத்

தோடு நெருங்கிய தொடர்பு கொண்டார். ஆலய விருத்தியைக் கருதி உழைப்பதும் அம்பாள் அருள்வேண்டித் துதிப்பதும் ஆகிய அமைதி வாழ்வை மேற்கொண்டி ருந்தார். 1976ஆம் அண்டு அக்டோபர் மாதம் 29ஆம் நாள் வெள்ளிக்கிழமை மாலை ஐந்தரை மணி கடந்துகொண்டி ருந்த வேளையிலே அதிபர் ஜயரத்தினம் பற்றிய செய்தியொன்று காற்றினும் கடிய வேகத்தில் எங்கும் பரந்தது. ஆம், அதிபர் அவர்கள் திடீரென மாரடைப்பு நேர்ந்த மையால் அமரர் ஆயினார் என்பதே அச் செய்தியாகும்.

அனைவரதும் நெஞ்சகத்தின் இருள கற்றி, அனைத்துலகும் கலையொளி பரப்பக் காரணமாய் இருந்த ஜயரத்தின தீபம் எல்லார் உள்ளத்திலும் ஒரு தனியிடம் கொண்டு சுடர் விட்டெரியும் நந்தா விளக் காகிவிட்டது. அத்தீபம் எமக்கெல்லாம் ஒளிகாட்டும், நாம் இருளகல நடைபயில் வோமாக.

*வாழ்க ஜயரத்தினம் நெறி!*

## அவர் பணி காப்போம்

**திரு.நமசிவப்பிரகாசம் அவர்கள்**
*ஆசிரியர்,*
*இந்து சாதனம்.*

உள்ளம் உடைந்த உங்கள் மத்தியில் எதைத்தான் யான் எடுத்துரைக்கலாம். வெள்ளக்கணக்காக இங்கு குழுமி யிருக்கும் உங்கள் உள்ளங்களைக் கொள்ளைகொண்ட உத்தமர் இன்னமும் அநேகம் ஆயிரம் உள்ளங்களிலும் இடம் பெற உயர் வாழ்வு வாழ்ந்தனர். சிந்தனைச் செல்வர் பாவலர் துரையப்பாபிள்ளை யின் சிந்தனையில் எழுந்த கல்லூரி நாமம் 'மகாசனம்' அவ்வளவில் அமை யாது அவர்தம் மைந்தனுக்கும் பெயராகி விட்டது. மகாசனம் மனம் வாடிக் கண்ணீர் மல்க இங்கு நெடுந்துயில் கொள்கின்றார் 'மகாசனன்'.

திரு.ஜயரத்தினம் அவர்கள் கலைக் கோயில் கட்டி எழுப்பியவர் மட்டுமல்லர், ஆத்மசாந்தி நிலைக் கோயிலும் அங்கு துர்க்கையம்பதியில் அணிபெற மேலோங்க உழைத்தனர். எனவே, பரிபூரண வாழ்க்கைப் பண்பு அமைந்த இந்த உத்தமரின் பிரிவு உலகுக்கோர் பெருஞ் சரிவு ஆகும். ஆனால் அப்பெருமகனின் பரோபகாரப் பணியைப் பாதுகாப்போமேயானால் அதுவே அவரின் ஆத்மாவுக்குச் சாந்தி அளிக்கும்.

# வாரி வழங்கிய வள்ளல்

**திரு. க. கிருஷ்ணபிள்ளை அவர்கள்**
*முன்னாள் அதிபர்,*
*யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.*

பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் தவப்புதலவர் அமரர் ஐயரத்தினம் அவர்களின் பிரிவால் உண்டாய ஆற்றொணாத் துயரத்திற் பங்குபற்ற வருகை தந்துள்ள சகோதர சகோதரிகளே,

அன்னசத்திரம் ஆயிரம் அமைத்தலிலும் ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் கோடி புண்ணியமென்ற ஆன்றோர் வாக்கிற் கமையத் தந்தையின் வித்தியா தர்மத்தைத் தொடர்ந்து விரிவடையச் செய்த அமரர் சென்ற வெள்ளிக்கிழமை (1976-10-29) சிவன்தாள் சேர்ந்தார். கல்விச் செல்வத்தை வாரி வாரி இறைத்த செம்மல் இன்று எம்மத்தியில் இல்லாதது எங்கள் எல்லோருக்கும் ஈழத்திற் பலருக்கும் பேரிழப்பாகும். தமக்கு உறுதுணையாயிருந்து சேவைபுரிந்த எல்லோரையும் தம் மெய்யன்பினால் அடிமைகளாக்கும் ஆற்றல் அவரில் மிளிர்ந்தது வெளிப்படை. அவருடன் பதினெட்டாண்டுகள் கடமையாற்றும் பாக்கியத்தைப் பெற்றது எனது பூர்வபுண்ணியமென்று கருதுகின்றேன்.

சென்ற மூன்று வருடங்களாக இப்பெரியாரை அநேகமாகத் துர்க்கை அம்பாள் ஆலயத்திற் சந்திப்பதுண்டு. அவ்வாலய பரிபாலனத்தில் அவர் காட்டிய ஊக்கமும் மகிழ்ச்சியும் எம் போன்றவர்களை மெய்சிலிர்க்க வைத்ததுண்டு.

இயற்கையடையும்போது எவருக்குமுள்ள துன்பம் எள்ளளவேனும் இப்பெரியாருக்கிருக்கவில்லையென்பதை எண்ணும்போது, அபிராமிப்பட்டரின் அபிராமி யந்தாதிப் பாடல் இதற்கு இலக்கணமாயமைகின்றது :

**வவ்விய பாகத் திறைவரு நீயு மகிழ்ந்திருக்குஞ்**
**செவ்வியு முங்க டிருமணக் கோலமும் சிந்தையுள்ளே**
**யவ்வியந் தீர்த்தென்னை யாண்டபொற் பாதமு மாகிவந்து**
**வெவ்விய காலனென் மேல்வரும் போது வெளிநிற்கவே.**

இப்பெரியாரது ஆன்மா என்றென்றைக்கும் எங்கள் எல்லோரையும் நல்வழிப்படுத்தவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

# ஈழம் முழுவதற்கும் தொண்டாற்றியவர்

**பேராசிரியர் கலாநிதி திரு. க. கைலாசபதி அவர்கள்**
*தலைவர், இலங்கை பல்கலைக்கழகம்,*
*யாழ்ப்பாண வளாகம்.*

அமரர் திரு.ஐயரத்தினம் அவர்களது பெயரும் புகழும் ஈழத்தின் கல்வியுலகில் நன்கு பிரசித்தமானவை. இந் நாட்டின் கல்வி, கலை, கலாசாரம் ஆகிய துறைகளில் ஈடுபாடுடைய எவர்க்கும் அன்னாரது அயராத உழைப்பும் இலட்சிய வேகமும் ஏலவே தெரிந்த செய்திகள்.

நமது நாட்டிலே சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து மெல்ல மெல்ல உரு வாகி வந்த கலாசார மறுமலர்ச்சியின் பயனாகவும், குறிப்பாக நல்லைநகர் ஆறு முகநாவலர் உண்டாக்கிய சமய–கலாசார விழிப்புணர்ச்சியின் விளை வாகவும், கல்வியை மக்களுக்கு உரிய தொன்றாக்கல் வேண்டும் என்னும் வேணவா சிந்தனை யாளர் பலரிடத்துத் தோன்றியது. இவர்களில் பாவலர் துரையப்பாபிள்ளையும் ஒருவர். அவர் வகுத்த கல்வி மரபின் தொடர்ச்சி யைப் பேணிப் பாதுகாத்து வளர்த்த பெருமை அமரர் ஜயரத்தினத்துக்குண்டு. அந்த வகை யில் அவர் ஆற்றிய பணி – மாபெருஞ் சேவை – தெல்லிப்பழைக்கு மட்டுமன்றி, ஈழநாடு முழுவதற்குமே ஆற்றிய தொண் டாகும். அதனாலேயே அவர் புகழ் நாடு முழுவதும் மணம் பரப்பிக்கொண்டிக்கிறது.

மகாஜனக் கல்லூரிக்குத் தாம் இதய சுத்தியுடன் ஆற்றிய சேவையை மகன் தந்தைக்கு ஆற்றுமுதவியாகவும், தாம் பிறந்த மண்ணிற்கு ஆற்றும் நன்றிக்கட னாகவுங் கருதி ஜயரத்தினம் கருமமாற்றி வந்தார். அன்னாரின் கடமையுணர்ச்சி யிலும், கல்வித் தவத்திலும் செழித்து வளர்ந்த கல்லூரி அவருடைய வாழ்வின் நிறைவையும் வெற்றியையும் என்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கும் அமரர் ஜயரத்தினம் கல்வித் துறையில் ஈடுபாடு உள்ளோர்க்கும் சமூக சேவையில் அக்கறையுடையோர்க்கும் முன்மாதிரி யாய்த் திகழ்ந்தார். நேர்மை யுடன் உழைத்தவர்களின் பணிக்கு ஆத்ம சக்தி உண்டு. அதன் வழியில் மகாஜனக் கல்லூரி மேலும் புகழீட்டுவதாக.

**சீரார் செயல் வீரன் செம்மனத்தான் பாவலரின்**
**ஏரார் திருமகனாயிங்குதித்தான் - ஊரார்கள்**
**வாழ்த்தப் பணிபுரிந்த வள்ளல் ஜயரத்னம்**
**ஆழ்த்துதுய ராரறி வார்.**

– *வே. தியாகராசா*

PUBLIC LIBRARY JAFFNA

# சிந்தையில் நிலைத்தவர்

**திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள்**
*முன்னாள் அதிபர்,*
*ஸ்கந்தவரோதயக் கல்லூரி.*

நண்பன் ஜயரத்தினத்தின் மறைவைக் கேட்டவுடன் பெரும் அதிர்ச்சியடைந் தோம். தமது தந்தையார் ஒரு சிறு கிராமப் பள்ளியாகத் தொடங்கித் திறமையுடனும் துணிவுடனும் இடையூறு களை எதிர்த்து வளர்த்த பள்ளிக் கூடத்தை, இலங்கையின் பல துறை களிலும் முதற்றரப் பள்ளிக்கூடமாக்க இவர் அரும்பாடுபட்டார்; அயராது திட்டங் களைத் தீட்டிக்கொண்டே இருந்தார்; எத்தனையோ வெற்றிகளையும் கண்டார்.

**"நெருந லுளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை யுடைத்திவ் வுலகு"** என்பது குறள்.

நேற்றிருந்த எனது நண்பன் இன்றில்லை. இரவு பகலாக மகாஜனக் கல்லூரியின் முன்னேற்றத்திற்காகத் திட்டத்துக்குமேல் திட்டங்கள் போட்டுக் கொண்டிருந்த மூளை இன்று ஆறி, ஆழ்ந்த நித்திரையில் அமுங்கிக் கிடக்கின்றது.

அவர் இளைப்பாறிய பின் நாங்கள் சந்திக்கும் போதெல்லாம் பள்ளிக்கூடத்தைப் பற்றிப் பேசுவோம். அவருடைய தொண்டின் பெருமையையும், குறிக்கோளையும் நன்கு விளங்கியவரும், பல ஆண்டுகள் அவருடன் சேர்ந்து பள்ளிக்கூடத்தின் முன்னேற்றத்துக்கு அரும்பாடுபட்டவருமாகிய ஒருவர் இப்பொழுது அதிபராக வருவதைப் பற்றி நான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்தேன். பள்ளிக்கூடத்தைப் பேணி, நலம்பெற அவர் பாடுபடுவார் என்ற நம்பிக்கை ஜயரத்தினம் அவர்களுக்கு இருந்தது. இது அவருக்கு மனநிறைவு கொடுத்தது.

நீண்ட வாழ்வு, நிறைந்த வாழ்வாகி விடாது. மூன்று பிறப்பில் மற்றவர்கள் செய்யமுடியாத தொண்டுகளை இவர் ஒரே ஒரு வாழ்விற் செய்து முடித்தார். அவருடைய பூதவுடல் அழிந்துவிட்டது. ஆனால், அவர் கல்வி கற்பித்து வாழ்க்கைக்கு வழிகாட்டி வாழவைத்த கடலனைய மாணவ, மாணவிகளின் சிந்தையில் என்றென்றும் நிலைத்து நிற்பார்.

# அவர் வழி செல்வோம்

**திரு.ச. அம்பிகைபாகன் அவர்கள்**

*முன்னாள் அதிபர்,*

*வைத்தீஸ்வரக் கல்லூரி.*

திரு.ஜயரத்தினம் அவர்களை நினைக்கும்பொழுது ஐம்பதாண்டுகளுக்கு முன் புனித உடையணிந்து தலையில் வெல்வெற் தொப்பி அணிந்து அவர் ஐயர் பள்ளிக்கூடத்துக்குச் சென்ற காட்சியே என் மனக்கண்முன் முதலிலே தோன்றுகிறது. தந்தையார் பாவலர் துரையப்பாபிள்ளையைப்போல் மகனும் செய்வன எல்லாவற்றையும் செவ்வனே செய்யவேண்டும் என்னும் இலட்சியத்தைக் கடைப்பிடித்து வந்தார்.

நாமிருவரும் சிறிய ஆங்கிலப் பாடசாலைகளுக்கு அதிபரானோம். இவற்றை வளர்க்கும் பொறுப்பு நமக்கேற்பட்டது. மற்றைய கல்லூரிகளுக்கிருந்த வசதிகள் நமக்கிருக்கவில்லை. மக்கள் நல்லெண்ணமொன்றையே மூலதனமாகக் கொண்டு நமது கல்வித் தாபனங்களைக் கட்டியெழுப்ப முயன்றோம். இவ் விஷயங்களில் என்னிலும் பார்க்கத் திரு.ஜயரத்தினம் பெரு வெற்றியீட்டினார். அவர் காலத்திலேயே மகாஜனக் கல்லூரி இலங்கையிலுள்ள சிறந்த கல்லூரிகளிலொன்றெனக் கணிக்கப்பட்டது. சமயச் சூழலில் பிள்ளைகள் கல்விகற்க வேண்டுமென்னும் நோக்கோடு இரு கல்லூரிகளிலும் நாம் நடராசப் பெருமானின் திருவுருவங்களைப் பிரதிஷ்டை செய்தோம்.

திரு.ஜயரத்தினம் அவர்கள் வடமாகாண ஆசிரியர் சங்கம், வடமாகாண அதிபர்

சங்கம், இலங்கை அதிபர் சங்கம் (Head master's Conference) முதலிய சங்கங்களிற் பெரும் பதவிகளை வகித்தார். இலங்கை அதிபர் சங்கத்தில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர், அமெரிக்கர், ஆங்கிலேயர் முதலியோர் அங்கம் வகித்தனர். இவர்களெல்லோரும் திரு.ஜய ரத்தினம் அவர்களைச் சிறந்தவொரு கல்வி மானாகக் கருதி அவர்களுடைய ஆலோ சனைகளுக்குப் பெருமதிப்புக் கொடுத்தனர்.

மறைந்த பெரியாரின் ஞாபகத்துக்கு நாம் செய்யக்கூடியது அவர் சென்ற வழியே சென்று, அவர் எடுத்துக் கொண்ட பணிகளுக்கு நம்மாலியன்ற உதவிகள் புரிவதேயாகும்.

*அவர் ஆன்மா சாந்தியடையவதாக.*

# ஓயாது உழைத்த உத்தமன்

**திரு. வே. தியாகராசா அவர்கள்**
*முன்னாள் கனிஷ்ட அதிபர்,*
*மகாஜனக் கல்லூரி.*

இப்பெருமகனார் எண்ணுவதெல்லாம் உயர்வெண்ணம், எண்ணிச் செயலாற்றுவ தெல்லாம் சிறப்பெய்தும். வாழ்வில் செயற் கரிய கருமங்கள் பல ஆற்றிச் செம்மை கண்ட செயல் வீரன். கருமமே கண்ணாய கருமவீரனை இன்று மரம்போல வெட்டி வீழ்த்திச் செயலறச் செய்தனனே கொடிய காலன். கலங்கி நின்று புலம்புகின்றோமே; கரைகாணாது, ஆறுதல் அடைய அரும் பணிகள் பலவும் ஆற்றியும் சென்றனையே.

பூரண ஞானி போன்று அவஸ்தை சிறிதுமின்றி மண் வாழ்வை நீத்த நின் பெருஞ்சிறப்பை யாரறிவார். திரிகர ணங்கள் மூன்றும் சுத்தியடைந்தார்க்கன்றி இப்பெருமரணம் வாய்த்தல் அரிது. 'உனை நீயறி' என்பதனை நன்றாய் அறிந்து செயற்படுத்தினை. பயனும் பெற்றனை. ஐப்பசித் திங்களும், சுக்கிர வாரமும், கந்தசட்டியும் கூடிய பெருநாளன்று சிவப் பேறும் பெற்றனை. கிடைக்கப்பெறுமோ இப்பெரும்பேறு. புகழொடு வாழ்ந்து, புகழொடு புவிநீத்த பெருமையையும் காண்கின்றோம்.

அரை நூற்றாண்டு காலம் கல்வியுல கிலும் சமுதாய வாழ்விலும் கலந்து நின்று ஒளிபெருக்கி, இருள்நீக்கி ஓயாது உழைத்த உத்தமனே உறங்குகின்ற னையோ?

குடும்பத்தின் தூண்டா விளக்காய், மகாஜனாவின் பெருஞ்சிற்பியாய், சமா தான நீதிபதியாய், கல்வியுலகின் கலங் கரை விளக்கமாய், மாணவரின் உளங் கவர்ந்த நல்லாசிரியனாய், சமுதாயத்தின் உற்ற நண்பனாய், தொண்டர்களின் தொண்டனாய், துர்க்காதேவியின் அருள் நிலைக் காவலனாய் வாழ்ந்தனையே.

# வழிநடத்திய மாமேதை

**திரு. பொ. கனகசபாபதி அவர்கள்**
*முன்னாள் அதிபர்,*
*மகாஜனக் கல்லூரி.*

அன்பு நிறைந்த மனதினாலே எம்மை எல்லாம் ஒரு குடும்பம் போற் பரிபாலித்த ஆலமரம் எம் கண்முன்னே மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்திருப்பதைக் காண்கின்றேன். தன் குமிண் சிரிப்பால் எம் சோர்வை எல்லாம் போக்கி உற்சாகத்துடன் கடினமாக உழைக்க வைத்த மாமேருமலை எம் முன்னே சாய்ந்து கிடக்கக் காண்கின்றேன். அறிவுச் சுடர் வீசும் அன்பு விழிகள் மூடிக் கிடப்பதைக் காண்கின்றேன். அவர் செயற்கரிய செய்ய வேண்டும் என்ற நெஞ்சுறுதியுடன் பம்பரம் போல் சுழன்று – தொழிற்பட்டு – எம்மையெல்லாம் அவ்வழி நடத்திய மாமேதை.

திரு. ஜயரத்தினம் அவர்கள் தம் வாழ்விலே நினைத்ததை முடித்துக் காட்டியவர். நடக்கமுடியாததை நினைத் தவர் அல்லர்.

**எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணயர் ஆகப் பெறின்.**

என்பது வள்ளுவர் வாசகம். எமது ஒப்பற்ற தலைவர் இக்குறள் வழி வாழ்ந்தவர்; மன உறுதி ஒன்றையே மூலதனமாகக் கொண்டு மற்றையோர் நினைக்கமுடியாத பல சாதனைகளை நிலைநாட்டினார்.

தம் மனைவி, மக்கள், பொருள் யாவற்றையுமே கல்லூரிக்காக மறந்தார். அவர் கனவு நினைவு யாவுமே மகாஜனக் கல்லூரியும் அதன் ஏற்றமுமே. ஓய்வு பெற்ற பின்னும் கல்லூரியின் உயர்வு பற்றியே சதா சிந்தித்தவர் அவர். அவரை மகாஜனக் கல்லூரியிலிருந்து என்றுமே பிரிக்கமுடியாது. அவர் அத்துடன் அத்துவிதமாகி விட்டார். அவர் இழப்பு எமக்குப் பேரிழ்பபு. இலங்கையில் – ஏன் உலகில் – பல பாகங்களில் அவர் உருவாக்கிய பொறியியலாளர்கள், மருத்துவர்கள், தொழிலதிபர்கள், கணக்காளர்கள் முதலிய பலர் இருக்கிறார்கள். விடுமுறைக்கு இவர் அன்பு முகத்தைக் காண ஓடோடி வரும் இவர்கள் இப்பேரிழப்பை எப்படித் தாங்குவாரோ!

# நடக்கக்கூடாதது நடந்துவிட்டது

**திரு.மா.மகாதேவன் அவர்கள்**
*ஆசிரியர்,*
*மகாஜனக் கல்லூரி.*

'நெருநல் உளன் ஒருவன் இன்று இலன்' என்னும் வள்ளுவர் வாக்கிற்கு இலக்காகி விட்டார் திரு.தெ.து.ஜயரத்தின மென்னும் பெருமகனார். கல்வியுலகில் அணையாது பெருஞ் சோதியாய் விளங்கிய தீபமணைந்து விட்டது. அன்னாரது புகழ் பூத்தவுடம்பு எங்கள் உள்ளத்தில் என் றென்றும் நிலவு மென்பதில் சற்றுமையமில்லை.

இப் பெரியாரோடு நான் சென்ற இரு பத்தைந்து ஆண்டுகளாகத் தொடர்பு கொண்டிருந்தேன். அவரின் அரவணைப் பில் மகாஜனக் கல்லூரியில் உதவி ஆசிரி யனாகவும் பின் சிலவாண்டுகள் உதவி அதிபராகவும் கடமையாற்றியிருக்கின் றேன். பின்பு ஒன்றரை ஆண்டுகளாக அவர் விட்டுச் சென்ற புனிதப் பணியை அதிபராகவிருந்து புரிந்திருக்கின்றேன். சிறிய கல்லூரியாக இருந்த மகாஜனக் கல்லூரி இன்று நாடெங்கும் தன் பெருமை சாற்றி நிற்பதற்கு இப் பெரியாரின் அயராவுழைப்பே முக்கிய காரணமென் பதில் சற்றுமையமில்லை. இவருடைய ஆட்சிக்காலம் மகாஜன அன்னையின் பொற்காலமென்று கூறினால் அது மிகையாகாது. மகாஜனாவின் சிற்பியின் கைவண்ணம் பட்டவிடமெல்லாம் பொன் வண்ணமாக மாறியதைக் கண்ணுற்று நாமெல்லாம் பெருமிதமடைந்தோம். கல்லூரியின் புகழ் யாழ்ப்பாணக் குடா நாட்டில் மட்டுமன்றி இலங்கை முழுவதும் பரவியது. கல்லூரியின் பழைய மாணவர் களின்று சகல துறைகளிலும் உயர் பதவி களிலிருப்பதே இதற்குச் சான்றாகும்.

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அப்பர் திருவாக்குக்கிணங்க கர்ம வீரனாக விளங்கினார். கருமமே கண் ணாய்க் கடமை புரிந்தனர்; மாணாக்க ரினது நலனையே மையமாக வைத்துச் செயலாற்றினார். இவர் கல்வியுலகி லிருந்து ஓய்வு பெற்றபின்பு சமயப்பணி, சமூகப்பணிகளில் ஈடுபட்டிருந்தது நாம றிந்த விடயம். துர்க்காதேவி கோவில் தர்மகர்த்தாச் சபையின் தலைவராயி ருந்து அருஞ் சைவத்தொண்டு புரிந்தார்.

# புகழொடு தோன்றிப் புகழொடு மறைந்தவர்

**திரு.த. நடராசா அவர்கள்**

*அதிபர்,*

*யூனியன் கல்லூரி.*

மதிப்பிற்குரிய அமரர் திரு.தெ.து.ஜயரத் தினம் அவர்கள் கல்விமானாகவும் சிறந்த பண்பாட்டுப் பெருமகனாவும் விளங்கினார். இனிமையும் எளிமையும் வாய்ந்தவ ராகவும் துலங்கினார். மேலான கல்வியைத் தம் கிராம மக்கள் சிரமமின்றிப் பெற்றுச் சிறப்படையவேண்டுமென்னும் ஓராவலால் உந்தப்பெற்ற அவர்தம் தந்தையாரால் நிறுவப்பட்ட மகாஜனக் கல்லூரியைத் தம் ஆர்வம் ஒன்றே துணையாகப் பெரியதோர் நிறு வனமாக ஆக்கினார்.

தெல்லிப்பழையிலுள்ள பிள்ளைகள் மாத்திரமல்லாமல் இலங்கையின் பல் வேறு பகுதிகளிலுமுள்ள மாணவர்களும் இக் கல்லூரியில் உயர் கல்வியைப் பெற்றுச் சிறந்த பயனைப் பெற்றிருக்கின் றார்கள். இவர்கள் இலங்கையில் மட்டு மன்றிக் கடல் கடந்த நாடுகளிலும் சென்று உயர்ந்த பதவிகளிற் சிறப்படைந்து கொண்டி ருக்கின்றார்கள். இதற்கு அமரர் ஜய ரத்தினம் அவர்களின் நிர்வாகத்திறனும் கலைத்திறனுமே காரணம் ஆகும்.

இக் கல்லூரி இன்று இலங்கையிலுள்ள பிரபல கல்லூரிகளுடன் போட்டியிடக் கூடிய நிலைக்கு வந்தது அமரர் அவர்களின் மெய்யார்வத்தினாலேயே. ஒரு தனி மனிதனுடைய வாணாள் குறுகிய கால எல்லையை உடையது. ஆனால், அரிதின் முயன்று நிறுவிய ஒரு நிறுவனம் அப்படி யானதன்று. அழியாப் புகழை நாட்டிய இந் நிறுவனம் உள்ளவரையும் அமரர் ஐய ரத்தினம் அவர்களின் புகழும் நீடித்தி ருக்கும் என்பதில் ஐயமே இல்லை.

புகழொடு தோன்றிப் புகழொடு மறைந்த இவர் எம் சமூகத்திற்கு விட்டுச் சென்ற இவ்வெச்சம் இவருக்குத் தக்கார் வரிசை யிற் சிறந்தவோரிடத்தை நல்கும்.

இத்தகைய ஒரு நல்லவர், நல்ல அதிபர் இவ்வளவு விரைவில் எம்மை விட்டுப் பிரிந்தது எமக்கு ஈடுசெய்ய முடியாதவோர் இழப்பேயாயினும் அதனை நாம் தாங்கி, அவர் வழியில் நின்று ஆக்கம் காண முயல்வோமாக.

# ஒப்பற்ற தலைவர்

**திரு. த. நடராசா அவர்கள்**
*தலைவர்,*
*அரிமாக்கழகம், தெல்லிப்பழை.*

ஒப்பற்ற எம் தலைவரை இழந்த இந்தத் துக்ககரமான சமயத்தில், 'அரிமாக் கழகம்' தெல்லிப்பழைக் கிளையின் முதல் உபதலை வர் என்ற முறையில் அமரர் ஐயரத்தினத்தின் ஜீவயாத்திரையில் சில வார்த்தைகள் கூறும்படி பணிக்கப்பட்டுள்ளேன்.

அமரரின் பலவித சேவைகளில் இறுதிச் சமூக சேவை தெல்லிப்பழையில் ஒரு அரிமாக் கழகம் உருவாக்கி நிலைநாட்டி யதேயாகும். இக் 'கழகம்' 17-10-1976இல் அஃதாவது அமரரின் அமரத்துவ நிலைக்கு 13 நாட்களுக்கு முன் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் அமரரால் ஆரம்பிக் கப்பட்டது. அவர் அதன் முதற் தலைவர் என்ற கௌரவப் பதவியையும் ஏற்றார்.

இப் பதவியை ஏற்க முதலில் தயங்கினா ரெனினும் பின்னர் இயைந்து ஏற்றுக்கொண் டார். எனினும், என்னுடன் இது பற்றிக் கலந்துரையாடினபோது, 'நமது பாரம்பரிய பண்பாடுகளுக்கு நான் இப் பதவியை ஏற்பது பொருந்துமோ' என்ற ஒரு ஐயப் பாட்டையும் தெரிவித்தார். அன்றியும் கடமையே வடிவமான அமரர் அவர்கள் 'நான் தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத் திருப்பணித் தலைவராக முழுநேரக் கடமை ஆற்றுவதால் இப்புதிய பொறுப்பை ஏற்றுச் சீரிதாக நடத்த இயலுமோ' என்ற ஒரு கருத்தையும் வெளிப்படையாகக் கூறினார். அப்போது நான், நமது கிராமச் சமூக முன்னேற்றத் திற்கு சமூக சேவை என்ற முறையில் தலைவராக அமைவது நமது பாரம்பரியம் பண்பாட்டுக்கு மாறானதல்ல. நமது பரி பூரணமான ஒத்துழைப்பு என்றும் உண்டு என்று தெரிவித்தேன். அதற்கு இணங்கிய அவர் இக் கழகத்தின் உபதலை வராகத் தம்முடன் பணியாற்றும்படி என்னைக் கேட்டுக்கொண்டார். வளர்க அன்னாரின் தொண்டு.

# சிகரம் அமைத்த சிறப்பினர்

**திரு. பொ. நாகலிங்கம் அவர்கள்**

*தலைவர்,*

*பட்டணசபை, சுன்னாகம்*

நான் சிறு பிள்ளையாயிருந்து பள்ளிக்குப் புறப்பட்டு வரும்போது, அமரர் திரு.ஐயரத்தினம், அவருடைய மனைவி யார் ஆகிய இருவரினதும் பேர்த்தியார் திருமதி அருளம்பலம் அவர்களுடைய படலையில் நின்று சைகை காட்டி என்னை அழைப்பார். அழைத்து ஒரு கனிந்த மாதுளம்பழமும் கொடுப்பார். இன்றும் என்னுடைய பெயர் இன்றைய பேச்சாளர் இடாப்பில் இல்லை. அமரர் திரு.ஐயரத் தினம் அவர்களின் விவாகத்தின் 25ஆம் ஆண்டு நிறைவு விழாவிலும் கூட எனது பெயர் பேச்சாளர் இடாப்பில் இல்லை. இருந்தும், அமரர் திரு.து. ஐயரத்தினம் அவர்கள் அவ் வைபவத்தில் என்னை மேடைக்கு அழைத்து ஒரு சில நிமிடங்கள் பேச வைத்தார். இன்றைக்கும் அவ்விதமே.

எனது தகப்பனாரும், அமரர் திரு. ஐயரத்தினம் அவர்களின் தகப்பனாராகிய திரு.துரையப்பாபிள்ளை அவர்களும், உற்றாண்மையாக வாரமொருமுறை யாகுதல் சந்தித்து உரையாடுவதை நான் கண்டிருக்கிறேன். எனது தகப்பனார் கல்வியறிவில் மேம்பட்ட வரல்லரெனினும், "நூல் அறிவிலும் பார்க்க ஊர் அறிவு மேம்பட்டது" என்று துரையப்பாபிள்ளை உபாத்தியாயர், நன்கு புரிந்து வைத்தி ருந்தார் போலும்!

திரு. துரையப்பாபிள்ளை அவர்கள் அஸ்திவாரத்தைப் போட்டு, மகாஜனக் கல்லூரியின் கீழ்த்தளத்தை மட்டும் ஆக்கிவைத்தார். ஆனால் இக்கல்லூரி யின் மேல்மாடிச் சிகரம் யாவும் அமரர் திரு.ஐயரத்தினம் அவர்களாலேயே பூரணப்படுத்தப்பட்டன.

அமரர் திரு.ஐயரத்தினம் அவர்கள், இப்பூவுலக வாழ்க்கையில் செய்த தானம், தர்மம், ஏழைகளைக் கல்வியில் முன் னேற்றியது போன்ற இன்னோரன்ன அரும்பணிகள், அன்னாருக்கு மேலுலக வாழ்க்கையிலும் நித்தியமான ஓர் இடத்தை உண்டுபண்ணும் என மனதார நான் வாழ்த்துகிறேன்.

அமரர்

# சிவநெறிக்காவலர் க.கனகராஜா J.P.

(மில்க்வைற் நிறுவன அதிபர்)

அவர்களின்



## 15வது ஆண்டு நினைவுநாள் பிரார்த்தனை

சைவத்தமிழரின் வாழ்வில் நீ

மறக்கமுடியாத மகத்தான மனிதன்

அறச்சிந்தனைகளை வளர்ப்பதற்கு

ஆயிரம் ஆயிரம் பிரசுரங்களை வெளியிட்டாய்

பாரம்பரியம் காப்பதற்காக பனை ஓலை ஏட்டில்

பள்ளி தோறும் பாலர்க்கு கல்வி தொடக்க வைத்தாய்

மரம் வளர்த்து எம்மண் செழிப்பதற்காய்

மனிதா எத்தனை ஆயிரம் மரங்கள் இலவசமாய்க் கொடுத்தாய்

பாடசாலைச் சிறார்கள் தாகம் தீர்க்க

பள்ளிகள் பலவற்றுக்கு இயந்திரம் கொடுத்தாய்

திருக்கோவில் முன்றலில் தேவாரம் அன்றி

பிறவார்த்தை யாதொன்றும் பேசற்க ஆலயத்தில் என அறிவிப்புச் செய்தாய்

உள்ளூர் உற்பத்தியை வைத்தே உயர்வு காணல் என்ற

உணர்வினால் பாரிய பணம் இழந்தாய்

பேரூந்துக்காகக் காத்து நிற்கும் மக்களுக்காய்
    எத்தனை நிழல் கூடாரம் அமைத்தாய்
அறம் சொன்ன ஔவைக்கு சிலை எழுப்பி
    அன்னை தங்கம்மா கையால் திறப்பித்தாய்
உலகத் தமிழாராய்ச்சி மாநாடு சிறக்க
    உறக்கமின்றி நீ உழைத்தாய்
"திருவாலவாய்" உன் வீட்டில் தினமும்
    தேடி வருபவர்க்கெல்லாம் அறம் செய்தாய்
வன்னிப் பெரு நிலப்பரப்பெல்லாம்
    வாழும் பனை நட்டு வளர்த்தாய்
பண்பாடும் மழலைகட்கெல்லாம்
    தாளமும் நூலும் கொடுத்தாய்

அறிஞர் க.சி.குலரத்தினம் அதிபர் பரநிரூபசிங்கம்
    அரணாக நின்று பலநூல் வெளியிட்டீர்
சிறுகைத் தொழிற்சாலைகள் உருவாக
    சிந்தித்து அண்ணா நிறுவனம் அமைக்க உதவினீர்
வள்ளுவர் குறள் வாழ
    வாழ்நாள் முழுதும் வழி செய்தீர்

மூதறிஞர் பலரை முறையாய்
    சான்றோர் அவையில் கௌரவித்தாய்
வாய்பேசா சிறார் பலர்
    வாழத் தொழில் கொடுத்தாய்
சிவநெறிக் காவலரே நீள நினைந்து
    சிந்தையால் வணங்குகிறோம்
உன்னைப்போல் ஒருவர் பிறப்பரோ
    உத்தமரே உலகை நேசிப்பதற்கு

- நன்றிக் கடன்பட்டோன்

# உடற்பருமன் (Body weight)

**Dr. S. டிசிஜயந்தி அவர்கள்**
*துர்க்காதேவி ஆயுள்வேத வைத்தியசாலை*

அசாதாரணமான, அதேசமயம் அளவுக் கதிகமான கொழுப்புச்சத்து தேக்கம் என்று எளிமையாக வரையறை செய்யலாம். அதாவது தினமும் எமது உடலிற்குத் தேவைப்படும் கலோரி (சக்தி)யின் அளவை விட அதிகமாக உட்கொள்ளும்போது அவை உடம்பில் சேமித்துவைக்கப்படுகிறது / படிகிறது. இதனால் சக்திச்சமநிலை குழம்பி கொழுப்புப் படிவதால் உடற்பருமன் அதி கரிக்கும். அதேநேரம் குருதியிலும் கொழுப் பின் அளவு அதிகரிக்கும். இதனால் குருதிக் குழாய்களின் சுவர்களிலும் படிய ஆரம் பிக்கும். எனவே உடற்பருமனானது வயது, பால், உயரம் என்பவற்றிற்கு ஏற்றவாறு அமையவேண்டும்.

உடற்பருமனைத் தீர்மானிப்பதற்காக உடற்திணிவுச் சுட்டெண் பயன்படுகிறது.

உடற்திணிவுச் சுட்டெண் எண்பது உடல்நிலை (Kg)யினை உயரத்தின் வர்க் கத்தினால் ($m^2$ – மீற்றர்$^2$) பிரிப்பதன் மூலம் பெறப்படும்.

$$\text{உடற்திணிவுச் சுட்டெண் (BMI)} = \frac{\text{உடல் நிறை (Kg)}}{\text{உயரம் (Kg)}}$$

நாம் ஒவ்வொருவரும் இதனைக் கருத்தில் எடுத்து உடற்பருமனைச் சரி யான முறையில் பேணமுடியும். இவ் உடற்திணிவுச் சுட்டெண்ணானது 25இலும் கூடவாக இருப்பின் அதிகரித்த உடற் பருமன் என்றும், 30இனை விட அதி கரிப்பின் வைத்திய ஆலோசனையைப் பெற்றுக்கொள்வது அத்தியாயவசிய மானது.

அதேநேரம் உடற்திணிவுச் சுட்டெண் ணானது 18இனை விடக் குறைவாக இருப்பின் குறைந்த எடையுடையவர் களாக இருப்பர்.இவர்கள் உணவில் முக்கிய கவனம் செலுத்தி தமது உடற் பருமனை சாதாரண நிலையில் பேண வேண்டும்.

**உடற்பருமன் அதிகரிப்பதற்கான காரணங்கள்**

1. தவறான உணவுப்பழக்கவழக்கங்கள். அதாவது அதிக கொழுப்பு, இனிப்பு பண்டங்களை உணவில் அளவுக்கதிக மாக உட்கொள்ளல், அடிக்கடி உண்ணல் போன்றவை.
2. உடற்பயிற்சியின்மை.
3. மன அழுத்தம்.
4. ஓமோன் சுரப்பியில் ஏற்படும் பிரச்சினைகள்.

உ–ம் : தைரொட்சின், வளர்ச்சி ஓமோன்.

5. சில மருந்துகளின் தொடர் பாவனை.
6. பரம்பரை

**உடற்பருமன் அதிகரிப்பதனால் ஏற்படும் பாதிப்புகள்**

1. மூச்சுக்கஷ்டம்
2. என்பு, மூட்டு நோய்கள்
3. கருப்பை, மார்பகம், குருதி என்ப வற்றில் கொழுப்பின் படிவு.
4. நரம்புகளிற்கான குருதி விநியோகம் பலவீனப்படுவதால் கை, கால்களில்

உணர்வு இழத்தல், இயக்கம் பாதிப் படைதல்.

5. நீரிழிவு (சலரோகம்), உயர் குருதி அமுத்தம், இருதய நோய்கள் ஏற்படல், கொலஸ்ரோல் உருவாகுதல்.
6. பித்தப்பையில் ..... உருவாகுதல்.
7. பிள்ளைப்பேறின்மை.
8. மன உளைச்சல்.
9. சிலவகைப் புற்றுநோய்கள் என்பன ஏற்பட வாய்ப்பு அதிகம்.

## உடற்பருமனை கட்டுப்பாட்டில் வைத்தி ருப்பதற்கான சில வழிவகைகள்

1. இனிப்பு, மாப்பொருள், கொழுப்பு சேர்ந்த உணவுகளை இயன்றவரை தவிர்த்தல்.
   உ-ம் : தயிர், வெண்ணெய், பாற்கட்டி, ஐஸ்கிறீம், கிழற்கு வகை, சொக்லெட், கச்சான், ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, எண்ணெய் பண்டங்கள், இனிப்பு பண்டங்கள் போன்றன.
2. மரக்கறி வகைகள், இலைக்கறி வகை கள், பழவகைகள், சிறிய மீன்கள் என்பவற்றை உணவில் அதிகமாகச் சேர்த்தல்.
3. தானியங்களை (குரக்கன் மா, அரிசிமா, கடலை, பயறு, உழுந்து போன்ற) ஒருநேர உணவாகப் பயன்படுத்தல்.
4. எண்ணெய்களில் சூரியகாந்தி, நல் லெண்ணெய், சோயா எண்ணெய் என்பவற்றை அளவாகப் பயன் படுத்தல், தேங்காய்ப்பால், எண்ணெய் தவிர்த்தல் சிறந்தது.
5. தினமும் உடற்பயிற்சி செய்தல் இதற்கான தினமும் சிறுவர்கள் 60 நிமிடத்தினையும் வளர்ந்தவர்கள் 20–30 நிமிடத்தையும் ஒதுக்குதல் சிறந்தது.
   உடற்பயிற்சி எனும்போது வியர்வை சிந்த, மூச்சு அதிகரிக்க, இதயத்துடிப்பு அதிகரிக்கச் செய்யப்படும் செயல் களையே குறிக்கும்.
   உ-ம் : சிறுவர்கள் ஓடி விளையாடுதல், வேகமாக நடத்தல், கயிறு அடித்தல், சைக்கிள் ஓடுதல் போன்றன.
6. இதற்கான சில யோகாசனங்களை தினமும் செய்தல்.
   *உ-ம் :* உத்தான பாதாசனம், அர்த்த கலா சனம், பவனமுத்தாசனம், பச்சிமோத் தாசனம், தனுராசனம் இவற்றை 6–12 தடவைகள் செய்தல் சிறந்தது.

இவற்றிற்கு மேலாக பின்வருவன வற்றையும் கைக்கொள்வதனால் உடற் பருமனைக் குறைக்கலாம்.

1. கடுக்காய்த்தோல், தான்றிக்காய், நெல்லி வற்றல், என்பவற்றை சமஅளவு தூள் செய்து தினமும் 1-2g காலை, மாலை இளஞ்சுடுநீரில் உட்கொள்ளல்.
2. கொள்ளுக்கஸாயம் 10-15ml தினமும் அருந்துதல்.
   (பெண்கள் கருத்தரித்த மாத விடாய் காலங்களில் அருந்துதல் கூடாது)
3. காலை எழுந்தவுடன் 10 கறிவேப்பிலை களை தினமும் உட்கொள்ளல். 3–4 மாதங்கள் உட்கொள்ள வேண்டும்.
4. உள்ளி ஒரு பூடு தினமும் உணவில் சேர்த்தல்.
5. மோர் பருகுதல்.
6. அப்பிள், வாழைப்பழம், மாதுளம்பழம் என்பவற்றை தினமும் எடுத்தல்.
7. கொவ்வை இலையைத் தினமும் காலையில் 40–50 நாட்கள் பயன் படுத்தல்.

8. உணவில் முள்ளங்கி, கோலி பிளவர், ஏலக்காய் என்பவற்றையும் சேர்த்துக் கொள்ளுதல்.
9. உணவை நன்கு மென்று உண்ணுதல். ஏறத்தாழ 15 நிமிடங்கள் உணவு உட்கொள்வதற்காக ஒதுக்கி உண வருந்துதல்.
10. தொலைக்காட்சி, வானொலி என்ப வற்றினைப் பார்த்துக்கொண்டு உண வருந்துதலைத் தவிர்த்தல்.
11. பொழுது போக்கிற்காக வீட்டுத் தோட்டம் போன்றவற்றை ஏற்படுத்துவ தால் உடல் உழைப்பை அதிகரித்தல்.

எனவே மேற்கூறப்பட்ட அறிவுரை களைக் கைக்கொண்டும் உடற்பருமனானது கட்டுப்பாட்டில் இல்லாதவிடத்து வைத்தியரை அணுகி அதற்குரிய பரி சோதனைகள் மூலம் உடற்பருமனிற்குரிய காரணங்களைக் கண்டறிதல் கட்டாயமாகும்.

இதனால் நோயற்ற வாழ்வை நோக்கிப் பயணிப்போமாக.

இதன்கீழ் குறிப்பிட்ட உடற்பருமனைக் கண்டறியும் அட்டவணையின் மூலம் தாங்களாகவே தமது நிறையினைச் சரிசெய்து கொள்ள ஏதுவாக இருக்கும்.

| Height / உயரம் (Feet and Metres) | Men / ஆண் Weight நிறை (Kgs) (கி.கி) | Women / பெண் Weight நிறை (Kgs) | |
|---|---|---|---|
| 5-0 (1.523 m) | 50.8 - 54.4 | 50.8 | 54.4 |
| 5-1 (1.548m) | 51.7 - 55.3 | 51.7 | 55.3 |
| 5-2 (1.574 m) | 56.3 - 60.3 | 53.1 | 56.7 |
| 5-3 (1.599m) | 57.6 - 61.7 | 54.4 | 58.1 |
| 5-4 (1.624m) | 58.9 - 63.5 | 56.3 | 59.9 |
| 5-5 (1.650m) | 60.8 - 65.3 | 57.6 | 61.2 |
| 5-6 (1.675m) | 62.2 - 66.7 | 58.9 | 63.5 |
| 5-7 (1.700m) | 64.0 - 68.5 | 60.8 | 65.3 |
| 5-8 (1.726m) | 65.8 - 70.8 | 62.2 | 66.7 |
| 5-9 (1.751 m) | 67.6 - 72.6 | 64.0 | 68.5 |
| 5-10 (1.777m) | 69.4 - 74.4 | 65.8 | 70.3 |
| 5-11 (1.802 m) | 71.2 - 76.2 | 67.1 | 71.7 |
| 6-0 (1.827m) | 73.0 - 78.5 | 68.5 | 73.9 |
| 6-1 (1.853m) | 73.3 - 80.7 | 73.3 | 80.7 |
| 6-2 (1.878 m) | 77.6 - 83.5 | 77.6 | 83.5 |
| 6-3 (1.904) | 79.8 - 85.9 | 79.8 | 85.9 |

# சிறுவர் விருந்து

## உயிர் காக்கும் மந்திரம்

**- சகோதரி யதீஸ்வரி அவர்கள்**

*அன்பான பிள்ளைகளே!*

சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் நடந்த ஒரு அற்புத நிகழ்ச்சி இது. திருகோணமலையிலே சிவானந்த தபோவனம் என ஒரு ஆஸ்ரமும், சிறுவர் இல்லமும் இருக்கின்றன. சிவானந்த தபோவனத்தைத் தாபித்தவர் வணக்கத்திற்குரிய சிவானந்த மாதாஜி என்னும் பெண் துறவி ஆவார். இவர் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்தவர். இமயஜோதி சிவானந்த மகராஜ் அவர்களுடைய உபதேசங்களில் ஈடுபட்டு, இமயமலை அடிவாரத்தில் உள்ள ரிஷிகேஷ் சிவானந்த ஆஸ்ரமத்தில் சென்று பயிற்சி பெற்று, சிவானந்த சுவாமிகளிடம் துறவு தீட்சை பெற்றவர். திருகோணமலையிலேயே வந்து தங்கிச் சேவை பல செய்தவர்.

இவரது சிவானந்த குருகுலம் என்ற சிறுமியர் இல்லத்திலேயே தங்கி அப்பிள்ளைகளை மிக நல்லபடி வழிநடத்தி வந்தவர்.

மிகவும் இடர்ப்பாடுகள் நிறைந்த காலங்களில் எல்லாம் தீரமிகு துணிவுடன் செயலாற்றி, திருமலை மக்களுக்கு நம்பிக்கைச் சக்தியாக விளங்கியவர்.

ஒருநாள் மாலைப் பிரார்த்தனை ஆரம்பிக்கும் நேரம். இல்லத்திற்கு வந்த அரசதுறை அதிகாரிகளிடம் உரை யாடிக் கொண்டிருந்தார் மாதாஜி. அப்போது சில சிறுமிகளும் ஒரு மேற்பார்வையாளரும் பதற்றத்துடன் அங்கே வந்தனர்.

மாதாஜி எழுந்துவந்து 'என்ன சங்கதி'? என்று விசாரித்தார்.

"பூந்தோட்டத்துப் புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த ஒரு பிள்ளையை விஷப் பாம்பு கடித்துவிட்டது" என்று பிள்ளைகள் அழுதபடி கூறினர்.

"அடடா! அழவேண்டாம் பிள்ளைகளே!" என்று அவர்கள் தலையைத் தடவி ஆறுதல் கூறிய மாதாஜி "பயப்படவேண்டாம். அந்தப் பிள்ளையைச் சுற்றி இருந்து திரியம்பக மந்திரத்தை மட்டும் சொல்லிக் கொண்டிருங்கோ! நான் இவர்களை அனுப்பிவிட்டு வாறன்" என்று அப்பிள்ளைகளை அனுப்பிவிட்டார் மாதாஜி. பிள்ளைகளும், மேற்பார்வையாளர்களும் ஓடிப்போய் பாம்பு தீண்டி மயங்கிக் கிடந்தபிள்ளையைப் பிரார்த்தனை மண்டபத்துக்குக் கொண்டுபோய் கிடத்தினார்கள். அப்பிள்ளையின் அருகே அமைதியாக, ஆனால் அழுதபடி திரியம்பக மந்திரத்தை நம்பிக்கையோடு சொல்லியபடி கண்மூடி பிரார்த்தனை செய்தார்கள்.

அரைமணி நேரத்துக்கு மேல் ஆகிவிட்டது. வந்தவர்களை அனுப்பிவிட்டு மாதாஜி பிரார்த்தனை மண்டபத்துக்கு வந்தார்.

"எங்கே அந்தப்பிள்ளை?" என்று கேட்டபடி உள்ளே வந்த மாதாஜி, "பிள்ளை! எழும்படா' என்று கூப்பிட்டார். அவ்வளவு நேரமும் மயக்கத்தில்

ஆழ்ந்துகிடந்த அந்தப் பிள்ளை "மாதாஜி!" என்று அழைத்த படி மெள்ள எழுந்து நின்றது.

எல்லாப் பிள்ளைகளும் ஆனந்த மேலீட்டால் "மாதாஜி! மாதாஜீ!" என்று குளறினர்.

"ஒன்றும் ஆகவில்லை! சரி பிரார்த்தனையைச் செய்வோம் வாருங்கள்!" என்று அமைதியாக முன்னால் போய் அமர்ந்தார் மாதாஜி.

அனைவரும் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

இந்த திரியம்பக மந்திரம் உயிர் காக்கும் மந்திரம் என்பதற்கு இதுபோல் பல சாட்சிகள் உண்டு. நம்பிக்கை கொண்டவர்க்கு நலமே விளையும்.

# அருள் ஒளி தகவல் களஞ்சியம்

**அதிபர் தெ. து. ஜயரத்தினம் நூற்றாண்டு விழா**

அதிபர் தெ.து.ஜயரத்தினம் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இம்மாதம் 15, 16, 17ஆம் திகதி களில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் விழாக்கள் நடைபெற அதிபர் ஏற்பாடு செய்துள்ளார். பலர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலிருந்தும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் 19-10-2013 சனிக்கிழமையும் தொடர்ந்து 20-10-2013 கொழும்பிலும் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வு கொழும்பு மகாஜனா பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

**பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலில் திருட்டு**

சரித்திரப் பிரசித்திபெற்ற பொன் னாலை வரதராஜப் பெருமாள் கோவிலில் மிகப் பெறுமதி யான வெள்ளி அங்கிகள் உட்பட நூற்றி ஐம்பது பவுண் எடை கொண்ட தங்க ஆபரணங்கள் இரவு வேளை திருடப்பட்டதாகச் செய்தி வெளிவந்துள்ளது. சைவ மக்கள் இச் செய்தியறிந்து மிகவும் அதிர்ச்சி யடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


**கோண்டாவில் காளி கோவிலுக்கு பஞ்சதள இராஜகோபுரம்**

கோண்டாவில் மேற்கு கந்தர் வளவு பிள்ளையார் கோவிலில் (காளி கோவில்) பஞ்சதள இராஜ கோபுரத் திருப்பணி நடைபெற்று வருகிறது.

**திருக்கேதீஸ்வரத் திருப்பணி**


இந்திய அரசின் ஏற்பாட்டில் மாமல்ல புர சிற்பக் கல்லூரியில் சிற்பங்கள் செதுக்கப்பட்டு கப்பல் மூலம் ஆல யத்தை வந்தடையும் பணி தொடர்ந்து கொண்டிருக்கிறது.

துர்க்காதேவியின் நவராத்திரிக் கொலு






மரக்கறிகளால் விஸ்வநாதர் அலங்கார



PUBLIC LIBRARY
JAFFNA

சனிஸ்வரன் திருவடி போற்றுவோம்



மயில் சோடனை– இயற்கையில் தோன்றிய வடிவம்.



ANDRA PRINTERS T.P : 021 222 8929